# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.


| மாலை 1 | ஞாயிறு 26-2-39 வெகுதான்யஹூ மாசிமீ 15உ | முத்து 22 |
| --- | --- | --- |

## பொருள் அடக்கம்


விஷயம் — பக்கம்

1. உண்மையான பட்ஜட் ... 594
2. குறிப்பு ... 596
3. வார நடப்பு ... 597
4. நட்டாற்றில் (ராஜம்) ... 598
5. தென்றல் காற்று ... 601
6. கிராமவாசியின் தேவை (அரயபுரம் ஸ்ரீ. வி. வேங்கடராமய்யர், எம். ஏ. பி. எல்.) ... 603
7. சிறிய இயந்திர ஏரின் அவசியம் (ஸ்ரீ. ஏ. ஜி. வேங்கடாச்சாரி, பி. ஏ.) ... 605
8. ஏன் ? (ஸ்ரீமதி கிருஷ்ணவேணி) ... 607
9. உலகம் பலவிதம் ("பாலி") ... 608
10. வீரனின் இரத்தம் (ஸ்ரீ. க, வேங்கடாசலம்) ... 609
11. இல்லொளி ("சுகப்ரியை") ... 611
12. ராஜா கோபிசந்த் (ஸ்ரீ. ரா. ஆறுமுகம்) ... 615
13. புத்தக விமர்சனம் ... 616
14. சிறுவர் பகுதி ... 617
15. குற்றம் குற்றமே (ஸ்ரீ. பெ. கோ. சுந்தரராஜன்) ... 619
16. வலை வீச்சு ... 622


"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள், எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.




# உண்மையான பட்ஜட்

இந்த வருஷம் ராஜாஜி தயாரித்துள்ள சென்னை சர்க்கார் வரவு செலவு திட்டம் உண்மையான பட்ஜட் என்று கூறவேண்டும். முதலில் செலவு இவைகளைத் தீர்மானம் செய்து மொத்தம் போட்டுக் கொண்டு, அதற் கேற்றவாறு வரவை, குறைத்திருந்தால் வரிகள் மூலம் அதிகப் படுத்துவதுதான் உலகமெங்கும் ஏற்பட்டுள்ள முறை. இதற்கு முன்பு இப்படி யில்லை. வரவில் மிச்சமிருந்தால் தான் தேவையான அதிகப்படிச் செலவுகூட நடைபெறும்.

"எந்த நிமிஷமும் பதவியை விட்டு விலக வேண்டிய நிலைமை ஏற்படலாம்; இருந்தாலும் நிரந்தரமாக இருப்பதுபோல எண்ணிக் கொண்டுதான் அரசாங்கத்தை நிர்வகிக்க வேண்டியிருக்கிறது" என்ற ஆழ்ந்த பொருள்படும் மொழிகளுடன் ராஜாஜி தனது மூன்ருவது பட்ஜட்டை சட்டசபைகளுக்குச் சமர்ப்பித்திருக்கிருர்.

காங்கிரஸ்காரர்களின் அரசாட்சித் திறமைக்கும் முக்கியமாக, நமது பிரதம மந்திரி நிதி நிபுணத்துவத்திற்கும் இது ஒரு தலை சிறந்த அத்தாட்சி. பட்ஜட் திட்டப்படி கலால் வரும்படியில் 65 லட்சம் துண்டு விழும்; ஸ்டாம்பு ரெஜிஸ்ட்ரேஷன் இவைகளிலும் வரவு குறைகிறது; இவற்றைச் சரிகட்ட துறைமுக நிதியிலிருந்து 42·55லட்சம், நாட்டுச் சாராயம், மின்சாரம், பெட்ரோல் இம்மூன்றின்மேல் புதிதாக விதிக்கப்படும் வரி கூடுதல் 25·12 லட்சம்—இவை சேர்ந்து மொத்த வருமானக் கம்மி 43·39 லட்சத்தை 17·27 லட்சமாக்குகிறது. சென்னை மாகாணத்திற்கு இது ஒருபிரமாதமான கம்மி அல்ல. 16 கோடி வரவு செலவில் இது மிகவும் சிறிய தொகை. மேலும் இதைக்கூட சரிக்கட்டுவதற்குப் புகையிலை, தமாஷ்கள், விற்பனைகள் இவற்றின் மேலும் வரி போடப் போகிருர்கள்.

இந்த வரி விதிப்பை சர்க்கார் முன் யோசனையுடன் பொது மக்களை அதிகம் பாதிக்காமல் நாளாவட்டத்தில் நிதி நிலைமையே ஸ்திரமாகும் முறையில் செய்திருப்பது மிகவும் பாராட்டத் தக்கது.

கலால்வரி என்ற ஆசையே போய், நில வரியை உயர்த்துவதென்ற பேச்சே எடுக்க முடியாமல் இருக்கும் நிலைமையில் இதர வழிகளில் வரிகள் விதிக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. அந்த வரிகளைத் தாங்கக் கூடியவர்களுக்கு விதிப்பதுதான் காங்கிரஸ் சர்க்காரின் லட்சியம்.

வரிகளால் வருமானத்தை அதிகரிப்பதுடன் செலவையும் சிக்கனம் செய்ய சர்க்கார் தீவிரமான முயற்சிகள் செய்து வருகிருர்கள். இதிலும் சர்க்கார் ஏழைகளைப் பாதிக்காத முறையில் சிக்கனம் செய்வார்கள் என்று நம்புகிருேம்.

கலால் வரும்படி நஷ்டத்தாலும் இதர சில இனங்களின் வரும்படிக் குறைவாலும் சிரமப்படும் நிலைமையிலும் கூட சர்க்கார் பல முன்னேற்ற திட்டங்களும் போட்டு மக்களுக்கு நிலவரி, கடன் விஷயங்களில் வசதிகள் அளித்திருக்கிருர்கள்.

75 லட்சம் வரி வஜாவைத்தவிர பஞ்சத்தால் பீடிக்கப்பட்ட பிரதேசங்களில் 50 லட்சம் வரிவஜா செய்கிருர்கள். 75 லட்சம் சர்க்கார் அளிக்கும் விவசாயக் கடன்களுக்கும் ரூ. 75 லட்சம் நில அடமான பாங்கு கொடுக்கும் கடன்களுக்காக உதவியாகவும் ஒதுக்கி இருக்கிருர்கள்.

20-ந்தேதி காங்கிரஸ் சர்க்கார் மாகாண மக்களின் வரவு செலவு திட்டத்தைப் போட்டிருக்கிருர்கள். 22-ம் தேதி வர்தாவில் கூடும் காரியக் கமிட்டிக் கூட்டம் அந்த சர்க்காரின் நிலைமையையே மாற்றுவதாக முடியலாம்; ஆனல் கர்மவீரன் பலா பலன்களை எதிர்நோக்கி ஒன்றும் செய்வதில்லை. காங்கிரஸ் பதவியிலிருக்கிற வரை தன்னல் இயன்றதை தைரியமாக உள்ளே இருந்து செய்யும்; வெளியே வந்தாலும் அதேவழியில்தான் கண்ணும் கருத்துமாக இருக்கும்.

## ஏ. ரெவின்யூ வரவு செலவு

| | (1000-ரூபாய்களில்) | | | |
|---|---|---|---|---|
| | 1937-38 கணக்கு | 1938-39 பட்ஜெட் | 1938-39 மதிப்பு | 1939-40 பட்ஜெட் |
| (1) ரெவின்யூ வரவு ... | 16,00,62 | 15,98,21 | 16,23,19 | 16,23,45 |
| (2) செலவு ... | 15,82,96 | 15,98,09 | 16,20,76 | 16,40,72 |
| அதிகம் + கம்மி (—) | + 17,66 | + 12 | + 2,43 | —17,27 |

## பி. ரெவின்யூ கணக்கில் சேராத வரவு செலவுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| (1) வரவு மார்க்கெட்டில்வாங்கும் கடன் ... | 1,64,03 | 1,75,00 | 1,51,29 | 1,50,00 |
| (2) வினியோகம் :— | | | | |
| (ஏ) மூலதனச் செலவு ... | 1,37,53 | 1,34,26 | 1,43,45 | 91,34 |
| (பி) ஸ்தல ஸ்தாபனங்களுக்கு கடன் கொடுப்பது (வரவு போக) ... | 23,08 | 82,98 | 79,01 | 1,16,74 |
| (ஸி) டிபாஸிட் ... | 9,96 | 3,19 | 13,03 | —64,02 |

(இந்த இனத்தில்(—)என்பது மிச்ச வரவாக, பற்றை விட வரவு அதிகம் என மதிக்கவேண்டும்.)

| | | | | |
|---|---|---|---|---|
| **வரவுக்கு அதிகமாக விநியோகிக்கப்படுவது** | **6,54** | **45,43** | **84,20** | **—5,94** |

## ஸி. கையிருப்புக் கணக்கு

| | | | | |
|---|---|---|---|---|
| (1) ஆரம்ப இருப்பு ... ... | 1,25,75 | 1,09,88 | 1,36,87 | 55,10 |
| (2) கடைசி இருப்பு ... ... | 1,36,87 | 64,57 | 55,10 | 43,77 |

## டி. மூலதன பொறுப்புகளும், சொத்துகளும்

| | 1938 மார்ச் 31உ | 1939 மார்ச் 31உ (மதிப்புபடி) | 1940 மார்ச் 31உ (பட்ஜெட்) |
|---|---|---|---|
| (1) பொறுப்புகள் :— | | | |
| (ஏ) வட்டியுள்ளவை ... ... | 12,93,55 | 14,54,55 | 16,23,17 |
| (பி) வட்டியில்லாதது ... ... | 5,31,74 | 4,67,93 | 4,65,96 |
| ஆக மொத்தம் ... ... | **18,25,29** | **19,22,48** | **20,89,31** |
| (2) சொத்துகள் :— | | | |
| (ஏ) ரெவின்யூ தரக்கூடியவை. | | | |
| (i) வருமானமளிப்பவை ... | 23,31,49 | 25,28,21 | 27,15,04 |
| (ii) வருமானமற்றவை ... | 4,64,94 | 4,65,36 | 4,66,25 |
| (பி) மற்ற சொத்துகள் ... ... | 85,70 | 1,12,26 | 1,34,87 |
| (பஞ்ச நிதி, மின்சார ரிசர்வ் நிதிகளிலுள்ள செக்யூரிடிகளை சேர்க்காமல்) | | | |
| (ஸி) ரொக்க இருப்பு வைப்பு கணக்கிலுள்ள செக்யூரிடிகள் ... | 79,72 | 42,55 | |
| (டி) முடிவில் கையிருப்பு ... | 1,36,87 | 55,10 | 43,77 |
| ஆக மொத்தம் ... | **30,98,72** | **32,03,48** | **33,59,93** |
| (3) பொறுப்புகளுக்கு அதிகமான சொத்துகள் | **12,73,43** | **12,81,00** | **12,70,80** |

(ஸி. கையிருப்பு என்ற இனத்தில் ரொக்க இருப்பு வைப்பிலுள்ள செக்யூரிடிகளும் பஞ்ச நிவாரண நிதியும், மின்சார ரிஸர்வ் நிதியும் சேர்க்கப்படவில்லை.)

## இ. பஞ்ச நிவாரண நிதி

| | 1937-38 கணக்கு | 1938-39 மதிப்பு | 1939-40 பட்ஜெட் |
|---|---|---|---|
| (1) ஆரம்ப இருப்பு ... ... ... | 59,96 | 64,54 | 45,57 |
| (2) இறுதி இருப்பு ... ... ... | 64,54 | 45,57 | 51,31 |

## எப். மின்சார ரிசர்வ் நிதிகள்

| | | | |
|---|---|---|---|
| (1) ஆரம்ப இருப்பு ... ... ... | ... | 5,73 | 14,80 |
| (2) இறுதி இருப்பு ... ... ... | 5,73 | 14,80 | 25,78 |

குறிப்பு

# திரிபுரியில்தான் தெரியும்

ஸ்ரீ போஸின் தேக அசௌகரியத்தால் வர்தாவில் காரியக் கமிட்டி கூடவில்லை. ஆனால் காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் எல்லோருங்கூடி எதிர்காலத்தைப்பற்றி சர்ச்சை செய்தார்கள்.

பண்டிதநேரு நிலைமையை நன்றாகப் பரிசீலனை செய்து காரியக் கமிட்டியிலிருந்து பெரும்பான்மையோர் விலகி விட்டால் இந்த சந்தர்ப்பத்தில் ஏற்படக்கூடிய சங்கடங்களையும் எடுத்துக் காட்டினர். தன் சகாக்களின் மேல் அபாண்டமாகச் சுமத்திய பழி மொழிகளை பகிரங்கமாக வாபஸ் பெறும்படி நேரு ஸ்ரீ போஸுக்குச் சொன்னதாகத் தெரிகிறது. அப்படி வாபஸ் வாங்கினல் ஒருவேளை போஸை ஆதரிக்காதவர்கள் காரியக் கமிட்டியிலிருந்து ராஜினமாச் செய்யாமலிருக்கலாம். ஆனல் அது நடக்கப் போகிறதில்லை. ஆகையால் படேல் முதலியவர்கள் விலகத்தான் போகிறார்கள். போஸின் தேக நிலைமையை உத்தேசித்து திரிபுரிக்குமுன்பு ஒன்றும் நடக்காதென்றும் தெரிகிறது.

வலது சிறகார்கள் என்ற தலைவர்கள் ரொம்பப் பிடிவாதமாக இருக்கிறார்கள் என்று நினைக்கக்கூடும். அவர்கள் வர்தாப் பேச்சுகளில் தீவிரக் கட்சிக்குக் கொஞ்சம் பாடம் கற்பிக்கவேண்டும் என்ற தோரணையில் பேசியதாகக்கூடத் தெரிகிறது. என்ன வானலும் அவர்கள் மனிதர்கள்தானே? அவர்களைப் பற்றி ஸ்ரீ போஸ் அவ்வளவு அகௌரவமாகப் பேசிய பிறகு அவருடன் ஒத்துழைப்பதென்றால் சிரமந்தான். அது மட்டுமா? போஸ் கட்சியினர் இன்னும் தங்கள் முறைப்பை விடவில்லை. ஸ்ரீ போஸ் நிலைமையை அறிந்து பணிந்து விட்டார். ஸ்ரீ எம். என். ராய் மேன்மேலும் பிளவு உண்டு பண்ணக்கூடிய முறையில் பேசிக்கொண்டுதான்போகிறார்.

ஸ்ரீ போஸ் தன் காரியக் கமிட்டி ஒன்றை ஏற்படுத்திக் கொண்டு வேலை செய்ய வேண்டும் என்று முடிவாக காந்திஜி அவரிடம் சொல்லி விட்டதின் பூராப் பொருளும் இன்னும் அர்த்தமாகவில்லை. ஏனெனில் போஸின் பேச்சுகளையும் தீவிர வாதிகளின் அசட்டுச் சவால்களையும் பொருட்படுத்தி காந்திஜி நாட்டை ஒரு நெருக்கடிக்கு உள்ளாக்க மாட்டார். ஸ்ரீ போஸ் தன் திட்டப்படி வேலை செய்து பார்க்கட்டும் என்று அவர் தீர்மானித்திருப்பது தீவிர வாதிகளுக்கு உண்மையிலேயே இடம் கொடுக்க வேண்டியது நியாயம் என்ற எண்ணத்தால்தான்.

வலது சிறகார்கள் என்று பழைய தலைவர்களுக்கு காந்திஜி வேறு வேலை வைத்திருக்கலாம். அந்த மாதிரி ஒரு வதந்திகூட பரவியது. ஆனல் திரிபுரிக்குமுன் எதுவும் தீர்மானமாகத் தெரியாது என்பது நிச்சயம்.

## ஆடு நனைகிறதே !

மின்சார வரியையும் பெட்ரோல் வரியையும் எதிர்த்துப் பேசிய சட்டசபை அங்கத்தினர்கள் சிலர் அவற்றை உபயோகப்படுத்தும் ஏழைகளுக்காகப் பரிந்து பேசினர்கள். அனியாயமாக ஏழைகளுக்கு வரிச்சுமை அதிகமாகிறதே என்று கதறினர் ஸ்ரீ அப்துல் ஹமீதுகான். "காங்கிரஸ் சர்க்கார் ஏழைகளுக்குச் சௌகரியம் செய்வதாகச்சொல்லுகிறதே, வரிகளைப் போட்டுக்கொண்டே போகிறதே? இதுதான சௌகரியம்? ஒரு வரியைக் குறைத்திருக்கிறதா?" என்று எப்பொழுதும்போல அர்த்தமில்லாமல ஆர்ப்பாட்டம் செய்தார். குறைக்கிறதெல்லாம் வரியில்லாமல் என்ன? பிரதம மந்திரி மிகவும் அழகாகச் சொன்னதுபோல மது விலக்கால் ஏற்பட்ட சௌகரியம் வரிச்சுமைக் குறைவுதானே?

மின்சார வரியால் கம்பெனிகள் மட்டும் அல்ல அவற்றை உபயோகப்படுத்துகிறவர்களும் பாதிக்கப்படுவார்கள் என்பதில் சந்தேகமில்லை; அதை பிரதம மந்திரியே ஒப்புக்கொண்டுவிட்டார். ஆனல் பாதிக்கப்படுபவர்கள் ஏழைகள் அல்ல, அவ்வளவாக. நடுத்தர வருமானம் கொண்டவர்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். பெரும்பான்மை யோரான குடியானவர்களுக்கு இவற்றால் இப்பொழுது ஒன்றும் பாதகமில்லை.

ஆனல் எதிர்க் கட்சியினருக்கு சர்க்காரைத் தாக்குவதற்கு ஒரு வியாஜம் தானே வேண்டும்? ஏதாவது ஒரு காரணத்தை வைத்துக்கொண்டுத் தூற்ற வேண்டியது தானே?

# வார நடப்பு

சென்ற வாரத்தில் ரூஸ்வெல்ட் ஆணித்தரமாகப் பேசிவிட்டார். சர்வாதிகாரிகளின் ஆக்கிரமிப்பினுல்மேலும்ஐரோப்பாவில் யுத்தம் வருமென்றும், ஆனுல் நிலைமை சமாளிக்க ஜன நாயகங்கள் முக்கியமாக அமெரிக்கா தயாரா யிருப்பதாகவும் அவர் விளாசிவிட்டார். இப்படி 'திடும்' என்று அவருக்கு அடக்கமுடியாத கோபம் வந்ததின் காரணத்தை அறியமுடியாமல் திண்டாடுகிருர்கள், பிரிட்டிஷ் பிரஞ்ச் ராஜ தந்திரிகள்.

ஸ்பெயின் போரில் பிராங்கோ அநேகமாக ஜெயித்து விட்டார். அவரை ஸ்பெயின் அரசாங்கத் தலைவராக ஒப்புக்கொள்ள, மெள்ள இங்கிலாந்தும் பிரான்ஸும் சதியாலோசனை செய்கின்றன. எப்பொழுது சதியாலோசனை செய்ய ஆரம்பித்து விட்டார்களோ, அப்பொழுது, கடைசியில் பிரான்கோவுக்கு 'சபாஷ்!' என்று சொல்லி விடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஸ்பெயின் சர்க்கார் தலை வணங்கினுலல்லது சமாதானம் உண்டாகாது என்று பிராங்கோ சொல்லி விட்டார். ஆனுல் ஸ்பெயின் சர்க்கார் விட்டுக் கொடுப்பதாகத் தோன்றவில்லை. பிரதம மந்திரி நெக்ரின் தலைவர் ஆஸானுவை மாட்ரிட்டுக்கு வரும்படி அழைக்கிருர். சர்க்கார் செய்துகொண்டிருக்கும் ஏற்பாடுகளைப் பார்த்தால் போர் சமீபத்தில் முடிவடையாது என்று தோன்றுகிறது.

ஜப்பானியர் ஹாங்காங்கில், பிரிட்டிஷ் பிரதேசத்தில், குண்டு போட்டதில் ஒரு இந்தியரும், பல சீனரும் கொல்லப்பட்டதாகத் தெரிகிறது. இது சம்பந்தமாக பிரிட்டிஷ் சர்க்கார் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் போகிருர்களாம். அதாவது இதை ஆக்ஷேபித்து ஓர் யாதாஸ்து அனுப்பப் போகிருர்கள்!

இந்தச் சந்தர்ப்பத்தில் ஷாங்கேயில் ஒரு பெரிய சீனப் பிரபு கொல்லப்பட்ட விபாத்தைக் கேட்கிறோம். அவர் ஜப்பான் மீது கொஞ்சம் அநுதாபம் கொண்டவராம். ஆகையால் யாரோ ஒரு சைனுக்காரன் அவரைக் குத்திக் கொன்று விட்டான். இனிமேல் கொலை, களவு, இவைகள் சர்வதேசப் பிரதேசத்தில் நிகழாமல் தடுக்க ஜப்பானிய சர்க்கார் கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் போவதாக, ஜெனரல் இடகாகி கூறி விட்டார்.

இந்தியாவைப்பற்றி காமன்ஸில் சில கோபமான கேள்விகள் கேட்டார் ஒரு அங்கத்தினர். 'வழ வழா' என்று பதில் சொன்னுர் உதவி இந்தியா மந்திரி. சமஸ்தான விஷயத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் தலையிடுமா என்பது கேள்வி. 'உண்டு' அல்லது 'இல்லை' என்று மூர்ஹெட் சொல்லுவாரா? மாட்டார். தலையிட்டாலும் தலையிடலாம் இல்லா விட்டாலும் இல்லை என்றுகூட அவர் உளறவில்லை. என்னமோ சொன்னுர். சொல்வது ஏதாவது புரிந்தால் தானே?

இந்தியாவில் சமஸ்தானப்போர் நெருக்கடி வலுத்து வருகிறது. இது சம்பந்தமாகக் காந்திஜி ஓர் திட்டம் தயாரித்து வருவதாக அறிகிறோம். இந்தியா முழுதும் இன்னும் சில வாரங்களில் நெருக்கடி ஏற்படலாம். லூதியானுவிலும் டெல்லியிலும் ஜவஹர்லால் நேரு பேசிவிட்டார். வரும் வாரங்களில் மிகவும் சிக்கலான நிலைமை ஏற்படுமென்பதைப்பற்றி அரசியல் வாதிக்குச் சந்தேகமில்லை. சமஸ்தானப் பிரச்னை சம்பந்தமாக அதிகாரிகளுக்கும் காந்திஜிக்கும் கடிதப்போக்குவரத்து நடந்துக் கொண்டிருப்பதாகச் சிலர் கூறுகிருர்கள்.

வலது சிறகார்கள் இடது சிறகார்கள் சண்டை சமஸ்தான நெருக்கடியால் பின்னுக்குப் போய்விட்டது. வலது சிறகுத் தலைவர்கள் பனிரண்டு பேர்கள் வார்தாவில்கூடி கா. கமிட்டியிலிருந்து ராஜினுமா செய்யத் தீர்மானித்துவிட்டார்கள். இப்படி இவர்கள் பிரிந்துபோகாமல் தடுக்க ஜவஹர்லால்நேரு முயலுவதாக அறிகிறோம். இந்தசமயத்தில் காங்கிரஸில் பிளவு உண்டாகாமல் இருக்க வேண்டுமென்பது ஆஸாத் எண்ணம்.

லிம்டி என்ற சமஸ்தானத்தில் பிரஜா பாரிஷாட் கூட்டமொன்றை சனுதனிகள், நடக்கவொட்டாமல் குழப்பம் விளைவித்ததாக ஒரு செய்தி கூறுகிறது. பல காங்கிரஸ் வாதிகளை சனுதனிகள் தாக்கி காயமுண்டாக்கியதாக அறிகிறோம். பிரஜா பரிஷாத்துக்குத் தலைமை வகிக்க வந்த தர்பார் கோபால் தாஸ் வீட்டைச் சூழ்ந்துக்கொண்டு, அவரை வெளியில் வரமுடியாமல் காலிகள் அட்டகாசம் செய்தார்களாம். ஆனுல் இவர்கள் கலாட்டா செய்தால் பரிஷாத் நடக்காமல் போய்விடுமா? பல தலைவர்களின் ஆசியுடன் மகாநாடு நடந்தது.

இமிடேஷன் சரக்கு

# நட்டாற்றில்

(ராஜம்)

ஸ்ரீ—பொ—தலைவிரிகோலமாக (அவர் தலையில் சிண்டு இல்லை) ஓடிவந்தார். மேல் வேஷ்டி போனது தெரியாமல், செருப்பைக்கூட கழற்றாமல் அறையில் நுழைந்தார். அவர் கண்களில் நீர் தாரை தாரையாகப் பெருகிக் கொண்டிருந்தது.

“ஏன் ஸ்வாமி, என்ன விசேஷம்? ஏன் இப்படிக் கண்களில் ஜலம் கொட்டுகிறது! பொடியை அதிகமாக உள்ளே இழுத்துவிட்டீரா?—” என்று ஆசிரியர் கேட்டு முடிப்பதற்குள் எதிரேயிருந்த நாற்காலியில் உட்கார்ந்து மூர்ச்சையானார். ஹல்வாவை வாயில் திணித்து, காபியையும் வாயில் கொட்டி, கண்களிலும், தலையிலும் கொஞ்சம் ஊற்றி, ஆச்வாஸப் படுத்தின பிறகு ஒருவாறு மூர்ச்சை தெளிந்தது.

“ஓய், இதென்ன பத்திரிகை ஆபீஸ் என்று நினைத்தீரா அல்லது நாடக மேடையா?” என்று கொஞ்சம் ஆத்திரத்துடன் ஆசிரியர் இரண்டு வாழைப்பழங்களை உரித்து வாயில் போட்டுக் கொண்டார்.

“என் நிலைமையை நீர் அறிந்திருந்தால்—” என்று ஸ்ரீ—பொ—மேலும் மூர்ச்சையாவதைத் தடுக்க ஒரு டம்ளர் காபியை உள்ளே ஊற்றினார்.

“என்னை யறியாமல் உம் நிலைமைக்கு என்ன வந்துவிட்டது? யமன் அறியாமல் உயிர் போய் விடுமோ?” என்று ஆசிரியர் கையிலிருந்த பேனாவைக் கீழேவைத்தார்.

“சரிதான், உம்மையும் இந்த காங்கிரஸ்காரர்களையும் நம்பினேன்—நட்டாற்றில் கொண்டுபோய் விட்டு விட்டீர்கள்! ஹூம்! ஹூம்!” என்று அழ ஆரம்பித்தார்.

“இதென்னய்யா கூத்து! இந்தக் காலத்தில் பெண்கள்கூட அழுவது கிடையாது-நீர்—”

“அழுவதற்கு இப்பொழுது அவர்களுக்கு என்ன இருக்கிறது?”

“உமக்குத்தான் என்ன?”

“இன்னும் என்ன வேண்டும்?”

“பட்ஜட்டில் பதினேழுலட்சம் சொச்சம் துண்டு விழுந்து விட்டதே என்று புலம்புகிறீரா?”

“அதற்கில்லை. திட்டத்தில் தானே துண்டு விழுந்திருக்கிறது? முடிவில் சரிக்கட்டியாகிவிடுமே.”

“பின் என்ன?”

“சரிக்கட்டுவதற்குள் காங்கிரஸ்காரர்கள் ராஜிநாமாச் செய்துவிட்டுப் போய் விடப் போகிறார்களாமே, பாவிகள்! நான் என்ன செய்யட்டும்? நட்டாற்றிலே—” என்று பிலாக்கணம் வைக்க ஆரம்பித்தார்.

“யார் சொன்னார்கள் உமக்கு?”

“என்னமோ சுபாஷ் சந்திரபோஸ் தீவிரத் திட்டம்போட்டு, என்னமோ நோடீஸ் கொடுக்கப் போகிறாராம். காந்தியைப் பின்பற்றினவர்கள் எல்லாம் வெளியே வந்துவிடப் போகிறார்களாமே?”

இதனால் பார்லிமெண்டரித் திட்டம் பாதகப்படுமா என்பது கேள்வி. வலதுசிறகார்கள் எனப்படும் காந்தீயர்கள் தீவிரவாதிகளுடன் ஒத்துழைக்காமல் இருப்பதால் மட்டும் பார்லிமெண்டரி திட்டம் பாதிக்கப்படமாட்டாது. தீவிர வாதிகளின்கீழ் அமைக்கப்படும் காரியக் கமிட்டி தற்போதைய மந்திரி சபைகளின் போக்கைத் தீவிரமில்லை யென்று கண்டித்து, வேறு உத்தரவுகள் போட்டால் தான் இப்பொழுதிருக்கும் மந்திரி சபைகள் ராஜிநாமாச் செய்யவேண்டிவரும். அல்லது சமஸ்தானப் பிரச்னை நாடெங்கும் வலுத்துப் போராட்டம் பெரிதானாலும் மந்திரிகள் ராஜிநாமாச் செய்யவேண்டி வரலாம்.

காரணம் எதுவானாலும் காங்கிரஸ் மந்திரி சபைகள், அதாவது இப்பொழுது அரசாங்கத்தை நடத்திவரும் மந்திரி சபைகள் ராஜிநாமாச் செய்ய நேரிட்டால் ஒரு விதத்தில் மாகாணங்களின் முன்னேற்ற நிலைமை ‘நட்டாற்றில்’ நிறுத்தினதுபோலத்தான் ஆகிவிடும். தலைவர்கள்

# என்ன சொல்லுகிறார்கள்?

நான் டைஜெஸ்டோவை உபயோகித்தேன். அது அஜீர்ணத்திற்குச் சிறந்த ஔஷதம் என்று அறிந்தேன். ஒரு புட்டிதான் உபயோகித்தேன். இது வரையில் எனக்கு வயிற்றுக் கோளாறுகளே இல்லை. என்னைப்போல், வெகு நாள் இந்தக் கொடிய நோயால் கஷ்டப் படுபவர்களுக்கு இதன் குணங்கள் நன்றாகத் தெரியவேண்டு மென்பதே என் விருப்பம்.

—கனம் ஸி. ஜே. வர்க்கி, M. A. K. S. G.
கல்வி மந்திரி.

# டைஜெஸ்டோ




டைஜெஸ்டோ அஜீர்ணம் முதலிய வயிற்றுக் கோளாறுகளுக்கு ஒரு சிறந்த ஔஷதம். ஒவ்வொரு வீட்டிலும் உபயோகிக்கத் தயாராக ஒரு புட்டி வைத்துக் கொள்ளவேண்டும் என்று எண்ணுகிறேன்.

—ஸ்ரீ கே. பாஷியம் பி. ஏ., பி. எல்., M.L.A.

**ஜெய பாரதம் கம்பெனி,**

**7, கொண்டி செட்டித் தெரு; ஜி. டி., மதராஸ்.**

இதை அறியாமலில்லை. ஆனால் நெருக்கடிகள் தாமாகவே ஏற்படும்பொழுது அவற்றை எதிர்த்துப் போராடுவதற்குத் தயங்க முடியுமா? இந்தச் சிறு மாகாண அமைதிக்காக நாட்டின் பெரிய போரைக் கைவிட முடியுமா? முடியாது.

"ஓய், ஒன்றும் கெட்டுப்போய்விடாது. எப்பொழுதும்போல நீர் காங்கிரஸ்காரர்களை நம்பி கவலையின்றி வீட்டுக்குப் போம். காந்திஜியால் சமாளிக்க முடியாத நிலைமையே கிடையாது. அப்பேர்ப்பட்டவர் இரவும் பகலுமாக நாட்டின் நிலைமையைப் பற்றி ஆலோசனை செய்துகொண்டிருக்கும்பொழுது ஏன் குதிக்கிறீர்? இப்பொழுது உமக்கு மூளையை உபயோகிக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர் சொல்லுகிறபடி மட்டும் கேட்டுக்கொண்டு வாரும், போதும். அவர் இருக்கும்பொழுது உமக்கென்ன குறைவு?"

"அவர் தீர்க்காயுஸாய் இருக்கணும்!" என்று சொல்லி பக்கத்திலிருந்த பீங்கான் கிண்ணத்திலிருந்து சர்க்கரையை எடுத்து தன் வாய்க்குத்தானே போட்டுக்கொண்டார்.

"ஓய், நான்?"

"நீரா! நீரும் சிரஞ்சீவியாய் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் ஏதாவது முடிச்சுப் போட்டு எழுதிக்கொண்டே இரும்" என்று சொல்லிவிட்டு குபீரென்று கிளம்பி வெளியே போய்விட்டார்.

---

# 1939-40

## முக்கியமான வரவு இனங்கள்

| | |
|---|---|
| வருமான வரி | 24,15,000 |
| நிலவரி | 4,99,57,300 |
| கலால் | 3,55,63,700 |
| ஸ்டாம்பு | 1,67,27,600 |
| காட்டிலாகா | 44,66,400 |
| ரெஜிஸ்டிரேஷன் | 31,74,100 |
| மோட்டார் லைசென்ஸ் | 82,91,300 |
| இதர வரிகள் | 18,34,400 |
| நீர்ப்பாசனம் | 2,05,13,200 |
| வட்டி | 23,03,400 |
| நீதி இலாகா | 17,19,900 |
| ஜெயில் | 5,82,700 |
| போலீஸ் | 6,82,100 |
| கல்வி | 7,59,500 |
| வைத்தியம் | 10,45,400 |
| சுகாதாரம் | 2,83,500 |
| கைத்தொழில் | 18,35,100 |
| மின்சாரம் | 61,58,800 |

## முக்கியமான செலவு இனங்கள்

| | |
|---|---|
| நிலவரி | 25,39,500 |
| கலால் | 30,86,200 |
| ஸ்டாம்பு | 4,94,800 |
| காட்டிலாகா | 39,73,600 |
| ரெஜிஸ்டிரேஷன் | 29,58,300 |
| மோட்டார் இலாகா | 73,63,300 |
| நீர்ப்பாசனம் | 1,28,97,900 |
| நிர்வாக இலாகா | 2,84,33,000 |
| நீதி | 92,53,000 |
| ஜெயில் | 23,35,900 |
| போலீஸ் | 1,61,85,400 |
| கல்வி | 2,64,57,300 |
| வைத்தியம் | 97,47,800 |
| சுகாதாரம் | 29,00,400 |
| விவசாயம் | 21,12,900 |
| கைத்தொழில் | 26,83,400 |
| மின்சாரம் | 1,60,01,800 |

# தென்றல் காற்று

சொல்வதற்கும் செய்வதற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறதென்று பொது ஜனங்களுக்குத் தெரிந்திருக்கிறது. ஆனால் பிரபல தலைவர்கள் என்று சொல்லிக்கொள்ளுபவர்களுக்கும் சில பத்திரிகாசிரியர்களுக்கும் மட்டும் தெரிகிறதில்லை. அவர்களுக்கு எல்லாம் ஒன்றுதான். சொல்லிவிட்டால் போதும்; ஒன்றும் செய்யவேண்டியதில்லை. ஒன்றுமே செய்ய வேண்டாம்; ஏதாவது சொல்லிக்கொண்டிருந்தால் அவர்களுக்குப் போதும். காரணம் அவர்களுக்கு அபார மூளை இருப்பதுதான்.

* * *

வீடு நெருப்புப் பற்றிக்கொண்டு எரிந்து கொண்டிருக்கிறது. அதை அணைக்க முயலாமல் "ஹோ, ஹோ!" என்று ஒருவன் கூச்சல் போட்டான். எல்லோரும் விழுந்து அடித்துக் கொண்டு ஓடிவந்தார்கள். அதற்குள் முக்கிய சாமான்கள் தீப்பற்றி நாசமாய் விட்டன. "ஏண்டா தண்ணீரைக் கொட்டி அணைத்திருக்கக் கூடாது?" என்று கேட்டார் எஜமான். "அதான் சத்தம் போட்டேனே!" என்றான் புத்திசாலி. அதோடு மட்டும் அவன் நின்றுவிடவில்லை. "நான் கூச்சல் போடாவிட்டால் நீங்கள் வந்து அணைத்திருக்க முடியுமா நெருப்பை?" என்று கேட்டான்.

* * *

சமஸ்தானங்களில் போர் மூண்டு விட்டது. காங்கிரஸ் தலைவர்களில் பலர் தியாக அக்னியில் குதித்துவிட்டார்கள். இந்த சமயத்தில் சில அண்ணாத்தைகள் "நாங்கள்தான் இரண்டு வருஷ காலமாக சமஸ்தானத்தில் தலையிடவேண்டும் என்று சொன்னோமே! நாங்கள் சொல்லிவந்த விஷயத்தைத்தான் இப்போது நீங்கள் செய்கிறீர்கள்!" என்று ஒரு 'லெக்சர்' அடித்துவிட்டு குலாப்ஜான் சாப்பிடப் போய்விட்டார்கள்! இப்படி 'அதி தீவிர பயங்கர வாதிகள்' கூச்சல் போடாவிட்டால் இந்தக் காங்கிரஸ்வாதிகள் சமஸ்தானப் போரில் தலையிட வந்திருப்பார்களா? மாட்டவே மாட்டார்கள். வீட்டில் உட்கார்ந்து நூல் நூற்றுக்கொண்டிருப்பார்கள். இவர்கள் மாதிரி ஊளையிட்டுவிட்டு அப்புறம் பிறர் செலவில் ஹோட்டலுக்குப் போகத் தெரியாது. காந்திக்காரர்கள் சுத்த அசடுகள்தான்!

* * *

ராம ராவண யுத்தத்தின்போது அரக்கர் மறைந்து நின்று மாய உருவத்துடன் போர் செய்தார்களல்லவா? அந்த மாதிரி சில அரசியல் வாதிகள் மாயப்போர் செய்ய வந்திருக்கிறார்கள். காங்கிரஸில் சேர்ந்து காங்கிரஸ்காரன் என்று நாமம் போட்டுக்கொண்டு காங்கிரஸ் கொள்கைகளுக்குத் துரோகம் செய்யும் நபர்களின் தொகை வளர்ந்து வருகிறது. இதைப் பற்றி, காந்திஜி அடிக்கடி எச்சரித்து விட்டார். ஆகையால் பொது ஜனங்கள் விழித்துக்கொள்ளத் தொடங்கிவிட்டார்கள். அதனால் ஒன்று மோசம் போய்விடவில்லை. காந்திஜியின் எச்சரிக்கையைத் தாங்களும் பொதுக்கூட்டத்தில் சொல்லிவிட்டு இன்னும் கொஞ்சநாள் அவர்கள் காலந் தள்ளலாமல்லவா?

* * *

லார்ட் எர்ஸ்கின் டெல்லிக்குப் போயிருப்பதைப் பற்றி ஒருவருக்கும் சந்தேகமில்லை. ஏனென்றால் அவர் அன்று கவர்னர் மாளிகையை விட்டு சென்ட்ரல் ஸ்டேஷனுக்குப் போனார்.

அதற்குப் பிறகு நாலைந்து நாட்கள் கழித்து பம்பாய் மூலமாக டெல்லி ஸ்டேஷனில் இறங்கினார். ஆகையால் அவர் வேறு எங்கேயாவது போய் விட்டாரோ என்று பயப்படவேண்டியதில்லை. ஆனால் ஒரு சந்தேகம். அவர் எதற்காக இந்த சமயத்தில் டெல்லிக்குப் போகவேண்டும்? காங்கிரஸிடமிருந்து சில முக்கியமான செய்திகளை கவர்னர்பிரபு வைஸ்ராயிடம் கொண்டு போயிருப்பதாகத் தென்றல் காற்று வாக்கில் ஒரு செய்தி வருகிறது. கவர்னர் திரும்பி வரும்போது வைஸ்ராயிடமிருந்து கொண்டுவரும் பதிலைத் தான் பொறுத்திருக்கிறது இந்தியாவின் எதிர்

காலம்—இப்படியாக ஹேஷ்யம் வெளிவருகிறது. எடுத்ததற்கெல்லாம் ஹேஷ்யம் கிளம்பும் இந்தக் காலத்தில் எதை நாம் நம்புவது? பத்திரிகை நிருபர்கள் தான் இருக்கிறார்களே, உண்மையை அலசிப் பார்த்து நமக்குச் சொல்ல!

* * *

இந்த வாரம் 'வலைவீச்சில்'' காணப்படும் 'அகில இந்திய ரேடியோ' ஊழலை நண்பர்கள் சிரத்தையுடன் வாசிக்கவேண்டியதில்லை. ஏனென்றால் வாசித்து அவர்கள் தெரிந்து கொள்ளப்போவது ஒன்றும் கிடையாது. அவர்கள் அ. இ. ரே. பற்றி ஒரு திட்டமான அபிப்பிராயத்தை ஏற்கனவே கொண்டிருக்கிறார்கள். அ. இ. ரே. என்றால் அசல் இடைஞ்சல் ரேடியோ என்று வியாக்யானம் பண்ண ஆரம்பித்தார் என் நண்பர். அப்படி இல்லை நமது ரேடியோ என்று நான் சொல்லி அ. இ. ரேயின் கௌரவத்தை நிலை நாட்டினேன்.

* * *

தவறைத் தவறு என்று சொல்வது நல்ல காரியம்தான். ஆனால் ஒரே ஒரு பிரகிருதிக்கு மட்டும் மகா பொல்லாத காரியமாகப் படுகிறது. அதாவது, தவறு செய்கிறவருக்கு! "ஐயா! அந்தத் தவறை செய்யக்கூடாது. அதனால் கெடுதல். நீங்கள் என்னவோ பணம் வருகிறது என்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் இப்படிச் செய்வதால் எவ்வளவு குடும்பங்கள் நாசமாய்ப் போகின்றன" என்று எடுத்துச் சொன்னால் ஒரு போட்டிப் பந்தயங்களைத் தொழிலாக வைத்துக் கொண்டிருக்கும் பத்திரிகாசிரியர் ஒப்புக் கொள்வாரா? மாட்டவே மாட்டார்! அவருக்கு மூக்குக்கு மேல் கோபம் வந்து விடும். ஆகையால் அப்படிச் சொல்லாமல் "ஐயா! நீங்கள் போடும் பந்தயங்களின் பேரில் வரி போடப்போகிறோம். நீர் சர்க்காருக்கு இவ்வளவு ரூபாய் செலுத்தி விடவேண்டும் தெரிந்ததா?" என்று நாஸூக்காகச் சொல்லிவிட்டார்கள் பம்பாய் சர்க்கார். ஒரு தினுசாக சம்பாதிக்கும் பணத்திற்கு ஒரு தினுசான வரியைப் போட்டு எடுத்துக்கொண் டிருப்பதைப் பற்றி நமக்கு ஆக்ஷேபணை இல்லை. அதை வரி என்று சொல்லாமல் அபராதம் என்று நாம் சொன்னால்கூட கொடுக்கிறவருக்கு ஒன்றும் ஆக்ஷேபணை இல்லை.

உத்தரவாதமான
மரச்சாமான்களுக்கு

**கஸின் & கோ.**

17-18, பிராட்வே,
சென்னை.

போன்: 4221

# கிராமவாசியின் தேவை

(அரயபுரம் ஸ்ரீமான் வி. வெங்கடராமய்யர், எம். ஏ., பி. எல்.)

"பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை, அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை" என்ற வாக்கியம் ஞாபகத்துக்கு வருகிறது. சற்று நிதானித்து ஆராய்ந்தால், "அருளில்லார்க்கெவ்வுலகமுமில்லை" என்று சொல்வதே அனுபவத்துக்கு அதிகப் பொருத்தமாகத் தோன்றுகிறது. முக்கியமாக விவசாயிகளுக்குக் கடவுள் கிருபையில்லாமல் எதுவும் பயன்படாது. எப்பேர்ப்பட்ட மேட்டூர் அணை இருக்கட்டும், எவ்வளவு சிரமப்பட்டு நிலத்தை பண்படுத்திச்சாகுபடிசெய்யட்டும், சூரிய பகவான், வருண பகவான், கிருபை யில்லாவிட்டால் அதி விருஷ்டி அனுவிருஷ்டி தோஷங்களால் விவசாயியின் முயற்சி வீணாகி விடுகிறது. இவ்வருஷத்தில் மேற்கூறிய விஷயம் அனுபவத்தில் தெளிவாய் அறிந்துள்ளோம். நம் தேசத்து உழவன் இந்த உண்மையை நன்றாய் உணர்ந்தவன். இப்படியிருக்க சில தினங்களுக்கு முன் ஒருவர், இந்திய விவசாயி, மாஸ்கோவைக் குறிப்பிட்டு வழி தேடுவதாகப் பிரசங்கம் செய்ததைப் படித்தேன். இந்த விஷயத்தில் கொஞ்சம் ஆராய்ச்சி செய்வது உபயோகமானதாகக் கருதுகிறேன்.

மதாபிமானமும், கடவுளிடம் நம்பிக்கையும், வணக்கமும் இல்லாதவர்கள், நம்முடைய தேசத்தில் பெரும்பாலும் இல்லையென்றே சொல்லலாம். நிலத்தை உழுபவனிடத்திலும், அதில் உரிமை கொண்டாடுகிறவர்களிடமும், அந்நிலத்தின் பேரிலுள்ள பாசம் அளவுக்கடங்காதது. பல ஆயிர ஆண்டுகளாக இந்த மனப்பான்மை விருத்தியாகியிருக்கிறது. தற்காலம் இதை மாற்றி அபேதவாதக் கொள்கைகளைப் பிரசாரம் செய்ய முயற்சி செய்யப்பட்டு வருகிறது. நம்முடைய தற்கால நிலைமையில் பலவிதமான ஊழல்களும் கெடுதிகளும் இருக்கின்றனவென்பதில் சந்தேகமில்லை. இவைகளை யொழித்து, நல்ல நிலைமை யுண்டுபண்ண மார்க்கம் தேடுவதும் நம்முடைய முக்கியமான கடமை யென்பதில் ஐயமில்லை. ஆனால் அதற்கு அபேதவாத வழி சரியா, அல்லவா, என்பதையும், அதைத்தவிர வேறு வழி யில்லையா, என்பதையும் பற்றிச் சமூகத் தலைவர்கள் தீர்க்காலோசனை செய்வது அவசியமேயாகும்.

மகாத்மா காந்தியின் அஹிம்ஸா மார்க்கத்தைக் கைப்பற்றி, அதன்படி நாமெல்லோரும் ஒற்றுமையாக நடந்து வருவோமேயானால் ஜன சமூகத்திலுள்ள எல்லாவிதமான கோளாறுகளையும் ஒழித்து முன்னேற்ற மடையலாம். உலக வாழ்க்கையில் ஏற்படும் எல்லாவிதமான பிரச்னைகளிலும், ஹிந்து மதத்தின் வழியாகவும், அதிலும் காந்தீய அஹிம்ஸா தர்மத்தாலும், ஸாத்வீக எதிர்ப்புத் திட்டத்தாலும் தீர்க்க கூடாதது எதுவுமில்லை. உலகில் ஸ்தாபனம் செய்யப்பட்டுள்ள மதங்களுக்குள், பேரறிவு, பிறமதஸ்தர்களுக்குச்சுயேச்சை, சுகாதாரம், ஒத்துழைப்பு, சமூகத் தொண்டு, இல்வாழ்வு, முதலிய சாதனங்களுக்குச் சிறந்த கொள்கைகள் ஹிந்து மதத்திலில்லாதது வேறு எதிலுமில்லை யென்பதைத் தத்துவ சாஸ்திர நிபுணர்கள் நன்றாய் விளக்கி யிருக்கிறார்கள். பல்லாயிர வருஷங்களாக வளர்ந்து வந்த ஹிந்து ஜன சமூக வாழ்வில் ஏற்பட்டுள்ள குறைகளைத் தீர்க்க, நம் தேசாபிமானிகளும் தலைவர்களும் அயல்நாட்டுத்திட்டங்களைக் கைப்பற்றியா வழி கண்டுபிடிக்கவேண்டும்? தற்காலம் இந்தியாவில் அபேதவாதத் திட்டத்தை நிறைவேற்றினால் சமத்துவம் ஏற்படும். ஆனால் அது எப்பேர்க்கொத்த சமத்துவமாகுமென்றால், எல்லோரும் மிருகத்தன்மை கொண்டு இரவும் பகலும் ஏகாதசி விரதம் இருக்கவேண்டிய சமத்துவம்தான். கடவுள் சிருஷ்டியினாலல்லாத மானிட ஸ்பாவப்பயிற்சிக்குறைவால் சமூக வாழ்வில் உண்டான குற்றம் குறைகளைத் தீர்க்க மேல் ஸ்திதியிலுள்ளவர்கள் தியாகம் செய்து சமூகத் தொண்டு புரிந்தும்,

சமூக கல்வி நிலையை ஓங்கி வளரச்செய்தும் ஒற்றுமைப்பின் மூலம் பரிகாரம் தேட வேண்டுமே யொழிய, ஒரே மூச்சில் சமத்துவ பாவத்தை உண்டாக்கி விடுவதால் மட்டுமல்ல. கல்விச் சிறப்பின் பயிற்சியுடன் சேராத சமத்துவத்தின் நிமித்தமாக சமூக வாழ்வில் எவ்விதமான திருப்தியாவது அமைதியாவது ஏற்படக்கூடியதில்லை. அதன் பிறகும் மானிட ஜன்மத்துக்கு ஸ்வபாவமான ஆசையும், பாசமும், போராட்டமும் குறையும்தான். இதை விட வேறு வழியை நாடுவதே உசிதம்.

நம்முடைய தற்கால ஜன சமூகத்தின் சங்கியைக்கும், ஜீவனோபாயத்துக்கும், நாகரீக வாழ்வுக்கும், கல்வி அபிவிருத்திக்கும், ஹிந்து மதத்தின் முக்கியமான கொள்கைகள் விரோதமல்ல. மதத் தலைவர்கள் எவரும் அவ்விதமான அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவில்லை. மதாபிமானம் பொது மக்களின் நல் வாழ்வுக்கு வழியும், ஒற்றுமையும் உண்டுபண்ணக்கூடியதே. மதத்தின் விதிகள் பல சுகாதார விதிகளாகக் கருதக்கூடியவை. ஒரே மதத்தைச் சேர்ந்தவர்கள் சமூக வாழ்வின் மற்ற பகுதிகளிலும் ஒற்றுமைப்பது சகஜமாகும். மகாத்மா காந்தியின் அஹிம்ஸா சாஸ்திரம் சமூக வாழ்வில் ஏற்படும் எல்லாப் பிரச்னைகளுக்கும் பதிலும் தீர்ப்பும் அளிக்கக்கூடியது. இப்படியிருக்க நமக்கு ஏற்பட்ட வினைகளைத் தீர்க்க அயல் நாட்டுத் திட்டங்களையும், இவ்வுலக வாழ்க்கைக்கு மேற்பட உண்மை எதுவுமில்லையென்ற கொள்கையை அனுசரித்த விக்ஞான சாஸ்திரிகளையும், நாம் ஏன் தேட வேண்டும்?

ஆகையால் சமூக வாழ்வுக்குக் கடவுளிடம் அன்பும், நம்பிக்கையும் வேண்டும். கடவுள் அருளின்றி நாம் சுகமாக வாழ முடியாது. தற்காலம் மதாபிமானம் குறைவுபட்டு வருகிறது. அதை விருத்தி செய்ய ஒவ்வொரு கிராமத்திலும் பொது மக்கள் யாவரும் கடவுளைத் தொழும்படி வசதிகள் ஏற்படவேண்டும். எல்லோரும் ஆலயப் பிரவேசம் செய்யலாமென்ற சட்டம் மட்டில் ஏற்பட்டால் பிரயோஜனமில்லை. முதலாவது கோவிலில் கடவுள் பிரசன்னமாக யிருக்கும்படியான ஸ்திதி ஏற்படவேண்டும். அவ்விடம் தொண்டு செய்பவர்களும் தொழுவதற்கு வருபவர்களும் கடவுள் கிருபைக்கு அருகதை உள்ளவர்களாக்கவேண்டும். இது சாமான்யமல்ல. சிறுவர்களுக்கும் வயது வந்தவர்களுக்கும் மதத்தின் கொள்கைகளை நன்கு விவரித்துப் புகட்டியும், சமூக வாழ்வின் லட்சியங்களையும், பெருமையையும் விளங்கும்படி பிரசாரம் செய்யவேண்டும். இதற்காக அரசாங்கத்தில் ஒரு திட்டம் ஏற்படுத்தி அதைச் சரிவர நடத்திவர ஒரு இலாகா ஏற்படவேண்டும். இதற்கு ஏராளமான பணச்செலவாகும். ஆனால் கிராம வாசிகளால் செலுத்தப்படும் வரித்தொகையின் ஒரு சிறு பாகந்தான் செலவாகும். இப்படிச் செய்தால் ஜாதி மத துவேஷங்களும் மனிதனுக்கு ஸ்வபாவமான அஹம் பாவமும் நீங்கிவிடுவதுடன் "வந்தே தீரும்" என்று சொல்லப்படும் "வர்க்கப் போர்" இல்லாமலே அபேதவாதிகள் கருதும் உண்மையான சமத்துவமும் விருத்தியாகும். அந்த மனப்பான்மை வந்துவிட்டால் சமூக வாழ்விலுள்ள குற்றம் குறைகள் எல்லாம் ஒழிந்து கிராம வாசிகள் சந்தோஷத்துடனும் அமைதியுடனும் நோயற்ற வாழ்வையும், குறைவற்ற செல்வத்தையும் அடைவார்கள்.

# சிறிய இயந்திர ஏரின் அவசியம்

(ஸ்ரீ. ஏ. ஜி. வேங்கடாச்சாரி பி. ஏ.)

நம் நாட்டில் விவசாயிகள் கடனிலிருந்து விடுபட முடியாமல் தவிப்பதற்கான காரணங்கள் பல. அவற்றில் முக்கியமானது தாங்க முடியாத சாகுபடிச் செலவுதான். பெரிய ஆற்றுக்கால் அல்லது ஏரிப்பாசனங்கள் இருக்கும் பிரதேசங்கள் வெகு கொஞ்சம். நமது மாகாணத்தில் பெரும்பகுதி புஞ்செய் நிலங்களே. நஞ்செய் நிலங்கள்கூட, பெரும்பான்மையிடங்களில் வானம் பார்த்தனவாயிருப்பதால், வற்றாத கிணறுகள் இருந்தாலொழிய, புஞ்செய் நிலங்களைவிட அதிகமான பயனளிப்பதில்லை. நீரை இறைத்து சாகுபடி செய்வது—கபிலையாயிருந்தாலும் சரி,—விவசாயியைக் கடனாளியாக்கி விடுகிறது. கிணற்றில் போதிய ஜலமில்லாமற் போனால், அல்லது பருவமழை தவறிவிட்டால் கடனிலிருந்து மீள்வதற்கு வழியேற்படாமற் போகிறது. தவிர, புஞ்செய் நிலங்களில் ஆழமான கிணறுகளை வெட்டி, தோட்டக்கால் சாகுபடி செய்வதும் சிரம சாத்தியமான பிரச்னை. தோட்டக்கால்களை வைத்திருப்பவர்களும் செழிப்பாக இருக்க முடியவில்லை.

## கால்நடை கஷ்டம்

இதற்குக் காரணம் நல்ல ஜதை காளைகளாக இருந்த போதிலும், சேர்ந்தாற்போல் இரண்டு போகங்களுக்குக் கபிலையிலும் ஏரிலும் அடித்த பிறகு வாங்கின விலையில் கால்வாசிகூடக் கிடைப்பது அரிது. ஏர் மாடுகளின் கதியும் சற்றேறக்குறைய இதுதான். மாற்றி மாற்றி ஓய்வு கொடுத்து வேலை வாங்குவதற்கு வேண்டிய அளவுக்கு மாடுகளைக் காப்பாற்றும் பண நிலைமையோ, அல்லது கஷ்டம் நிறைந்த வேலைக்காலங்களில் போஷாக்கான தீனியைக் கால்நடைகளுக்குப் போடும் சக்தியோ குடியானவர்களில் பலருக்குக் கிடையாது. எனவே, இறைப்பிலும் ஏரிலும் கால் நடைகளை லாபகரமாய் உபயோகிப்பதற்கு முடியாமலிருப்பதால் விவசாயத்தையே நாளடைவில் லாபகரமாய் நடத்துவது அசாத்தியமாய் விடுகிறது. நல்ல எரு வாங்கவோ, அல்லது ஆழ உழுவதற்கோ, லாபகரமான பயிர்களைச் செய்வதற்கோ வேண்டிய மூலதனம் கையில் இருப்பதில்லை. ஏற்கனவேயுள்ள கடனின் காரணமாகப் புதிய கடன்களும் கிடைப்பது கிடையாது. இந்த நிலைமையில் நிலம் அருகேறி, பலன் குறைந்து விடுகிறது. வேறு தொழில் இல்லாமையால், நிலத்தைக் குடியானவன் கட்டி அழவேண்டியிருக்கிறது. இம்மாதிரி விஷமச் சக்கரம் வேகமாகச் சுழன்று கொண்டே போகிறது. எல்லாத் தொழில்களிலும், முக்கியமாக இயந்திர சாதனங்கள் உபயோகிக்கப்படும் எல்லாத் தொழில்களிலும், இயந்திர சாதனத்தினால் நஷ்டம் வராமலிருப்பதற்காகத் தேய்மான நிதி ஒதுக்கப்படுவது சகஜமாயிருந்து வருகிறது. ஆனால் விவசாயத்தில் மட்டும், முக்கிய சாதனமாகிய ஏர், இறைப்பு மாடுகள் சீராயிருந்து வருவதற்காக எந்தத் தேய்மான நிதியும் ஒதுக்கிவைக்கப் படுவதில்லை. இதற்கு முக்கியமான காரணம், நிலத் தீர்வைக்கும், வட்டிக்கும், மூன்று மாதச் சாப்பாட்டுக்கும் வேண்டிய அளவுக்குக்கூட மகசூல்கள் விளையாமலிருப்பது தான். இதையெல்லாம் பேசினால் ''உழுகிறவன் கணக்குப் பார்த்தால் உழவு கோல்கூட மிச்சமிருக்காது'' என்று குடியானவன் பதிலளிக்கிறான்.

## கடன் நிவாரணம் மட்டும் போதாது

குடியானவனைக் கடன் பளுவினின்றும் விடுவிப்பதற்குக் காங்கிரஸ் சர்க்கார் ஏதோ பாடுபட்டு வருகிறார்கள். இந்தப் பிரச்னையை வெற்றிகரமாகத் தீர்க்க அவர்கள் இன்னும் விரிவான ஏற்பாடுகளைச் செய்வார்களென்று நம்பலாம். விவசாயச் செலவுகளுக்கு வேண்டிய கடன்கள் சுமாராகக் கிடைக்கக்கூடியவாறு, கூட்டுறவு ஸ்தாபனங்கள் திருத்தியமைக்கப்

படுவதாகவும் வைத்துக்கொள்வோம். அப்படிச் செய்வதன்மூலம் விவசாயிகளின் நிலைமை சற்று சகிக்கக்கூடியதாகலாம். ஆனால், மறுபடியும் அவர்கள் பழைய ரோதையிலேயே போய்விடாமல் தடை செய்ய வேண்டுமானால், சாகுபடிச் செலவைக் குறைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் அவசியம். முக்கியமாகக் கால் நடைகளின் மதிப்புக் குறைவினால் ஏற்படும் நஷ்டம், அலட்சியம் செய்ய முடியாத பிரச்னை. கால் நடைகளேயில்லாமல் விவசாயத்தை நடத்த முடியுமென்று யாரும் சொல்லமாட்டார்கள். டிராக்டர்கள் என்ற பெரிய இயந்திரங்களைக் கொண்டு சாகுபடி நடத்துவது இப்போதைய நிலைமையில் சாத்தியமல்ல. சாத்தியமாயிருந்தாலும், அவற்றைத் தனிப்பட்டவர்கள் புகுத்தும்படிவிட்டால், அபரிமிதமான ஏழைகளுக்குப் பிழைப்பு இல்லாமற் போய்விடும். அவைகளுக்கு இந்நாட்டில் அவசியம் எக்காலத்திலாவது ஏற்படுமா வென்று நிச்சயமாக இப்பொழுது சொல்ல முடியாது.

## சிறிய உழவு இயந்திரங்கள்

நிலங்களை உழுவதற்குக் குறைந்த செலவில் மிகச் சிறிய இயந்திர சாதனங்களைக் கண்டுபிடிக்க முடியாதா? எவ்வளவோ நுட்பமான சாதனங்களைக் கண்டுபிடிக்கும் விஞ்ஞானிகள், இந்தத் துறையில் கவனம் செலுத்தினால், அவர்களுடைய முயற்சி பயனளிக்கு மென்பதே என் நம்பிக்கை. இந்தப் புதிய சாதனத்தின் கிரயம் ரூ. 200-க்கு அதிகப்படாமலிருக்கலாம். இரண்டு அல்லது மூன்று ஏகர்களின் வேலையை அது செய்யக்கூடியதாயிருந்தால் போதுமானது.

இது சாத்தியமாகும் பக்ஷத்தில் கால் நடைகளினால் ஏற்படும் நஷ்டம் ரொம்பவும் குறைந்துவிடும். இவற்றை உபயோகிப்பதால் வேலையில்லாக் கஷ்டம் அதிகமாய்விடாது. வேலை நேரக் குறைவும் அத்தியாவசியமான ஓய்வும் கிராமவாசிகளுக்குக் கிடைக்கும். மிச்சப்படும் பணத்தையும் ஆட்களையுங் கொண்டு லாபகரமான புதிய சாகுபடிகளைச் செய்ய ஊக்கம் ஏற்படும். இம்மாதிரி இயந்திரங்கள் இருந்தால் நிலத்துக்கு உடையவர்களே அதிகமான தேகப்பிரயாசையின்றி சாகுபடி செய்வது சாத்தியமாகும். படித்தவர்கள் பலர், கிராமங்களிலேயே இருந்து கொண்டு, தங்கள் தசைகளை மட்டுமின்றி மூளையையும் உபயோகித்துச் சாகுபடி செய்ய முடியும். கிராம சேவை என்பது பேச்சளவிலிருந்து காரியத்துக்கு மாறும்.

இம்மாதிரி இயந்திரங்களின் விலையை நீண்டகாலத் தவணைகளாகச் செலுத்த ஏற்பாடு செய்வது சுலபமாயிருக்கும்.

## நீர்ப்பாசன வசதிகள்

இத்துடன்கூட, மின்சாரம் கிராமாந்தரங்களுக்குக் கிடைக்கும்படி செய்வதற்கு வேண்டிய எல்லா வசதிகளும் தென்னாட்டில் இருக்கின்றன. புத்திசாலித்தனமாய் அதை விநியோகித்தால், புஞ்செய்ப் பிராந்தியங்களில் நீர் இறைப்பதில் இருக்கும் கஷ்டங்கள் நீங்கிவிடும். பெரிய கிணறுகளை வெட்டவேண்டிய அவசியமில்லாமல், நீர்மட்டக் குழாய் சாதனத்தின் மூலம் (Tube wells) தேவையான ஜலத்தைச் சுலபமாகப் பெற்றுக்கொள்வது, மின்சார சக்தி மலிவாய்க் கிடைத்தால் மட்டுமே சாத்தியமாகும். கூட்டுறவு சாதனங்கள் சரிவர நடைபெறுமானால் இவை நாளடைவில் கனவிலிருந்து காரியாம்சமாய் விடலாம்.

ஆனால், எல்லாவற்றிற்கும் மேலாக, மேலே குறிப்பிட்டவாறு ஏர் உழுவதற்குக் குறைந்த விலையில், இயந்திர சாதனங்களைத் தயாரித்துக் கொடுப்பதுபோன்ற அவசரமான உதவி வேறு எதுவும் இருக்க முடியாது.

# என்?

(ஸ்ரீமதி கிருஷ்ணவேணி)

"இனிமேல் அங்கு போவதில்லை!" என்று எத்தனையோ தரம் தீர்மானித்து விட்டேன்.

என்னை அவர் மதிப்பதாகவே தெரியவில்லை; லட்சியம்கூடச் செய்வதில்லை. ஆனால் அப்படி அவர் வாயைத் திறந்து ஒரு நாளாவது சொல்லவில்லை. நானாகவே புரிந்துகொண்டேன். ஆனால்......என்னுடைய பிரதிக்ஞைப்படி நிற்கமுடிந்தால் தானே?

ஒவ்வொரு தடவையும் எனக்குப் பெருத்த அவமானந்தான் ஏற்படுகிறதென்று அந்தராத்மா அலறுகிறது.

"அவர்தான் உன்னிடம் சரியாகக்கூடப் பேசுகிறதில்லையே! நீ எதற்காக அங்கே போகிறாய்?" என்று உள்ளேயிருந்து ஒரு சிறுகுரல் எழுகிறது. என்னால் போகாமல் இருக்கமுடிந்தால்தானே?

"எதற்காக அங்கே போகவேண்டும்? நான் யார்? அவர் யார்? முன் பின் ஒருவிதமான சம்பந்தமுமில்லாமல்...அவருடைய கதைகளுக்காக அவரை...தேடிக் கொண்டு போகிறேன். ஆனால் அவர், இதனடியில், அந்தரங்கத்தில், என்னமோ எனக்குத் தனிக்கருத்து இருக்கிறதென்று நினைத்துக் கொண்டாரோ?...அல்லது வேண்டுமென்றே தம்முடைய நெஞ்சைக் கல்லாக்கிக்கொண்டு விட்டாரோ?

சேர்ந்தார்ப்போல ஒருவாரம் அவரைப் பார்க்காமல் இருக்க முடிவதில்லை. ஆனால் நான் போகிறபோதெல்லாம் அவர் அப்படியேதான் நடந்துக்கொள்ளுகிறார். திரும்பி வரும்போது அசந்த மனதுடன் நோவுடன் வந்து சேருகிறேன்.

ஆனால் மறுபடியும் அவரைப்போய்ப் பார்க்கவேண்டுமென்ற ஆவல்,வெட்கத்தையும் அமுக்கிக்கொண்டு தலை யெடுக்கிறது. அவர் ஏன் என்னை இப்படிக் கேவலமாக நடத்துகிறார்? நான் அவரிடம் வேறு ஏதாவது...சே இருக்காது!

அப்படியானால் இதன் அர்த்தம்தான் என்ன? எனக்கு என்னவென்றே புரியவில்லை.

மனிதப் பிரகிருதியை இப்படி ஆராய்ச்சி செய்து கதை எழுதுபவருக்கு ஒரு சின்னம் விளங்காதா? ஒரு மௌனம் அர்த்தமாகாதா? அல்லது என் உள்ளத்தைத் தான் ஒரு கதைக்காக, நான் இப்பொழுது பிய்ப்பதுபோல் பிய்த்து ஆராய்கிறாரா? ஒரு மனோ சித்திரத்திற்காக ஒரு உண்மையான உணர்ச்சியை அவர் சோதனை செய்து பலியிடுகிறார்?

இந்த வேதனையிலிருந்து எங்கேயாவது தப்பியோடி விடலாமாவென்றால்.....

இதென்ன ஆச்சரியம்! நானாகவே மெய்ம்மறந்து சென்று அவர் முன் என் உள்ளத்தை ஒரு மலர்போலப் பறித்து எறிந்துவிட்டு வந்தேன். அவர் தன் எழுத்திலேயே கண்ணாகவா இருக்கிறார்? அல்லது அதைப் பார்த்துவிட்டுத் தான் குனிந்தெடுக்கத் தயங்குகிறாரா?

என்ன, மனிதனாய்ப் பிறந்தால் எல்லோரும் பணக்காரராக இருக்கவேண்டுமாயென்ன? பணக்காரனாக இல்லாமல் பிறப்பது அவன் குற்றமா? அவன் உள்ளத்தின் உணர்ச்சி-அன்பு-அது கூடவா ஏழையாகப் போய்விடும்? அல்லது...

போனவாரத்தில் ஒரு நாள் மாலை நட்சத்திரங்கள் தோன்றிக்கொண்டிருந்த சமயம், அவர் வீட்டிற்குப் போயிருந்தேன். அவர் வீட்டில் இல்லை. எங்கோ போயிருந்தார். சற்றுக் காத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். அந்த வேளையில் என்னவெல்லாமோ எண்ணினேன். "அவர் பெரிய மேதாவியாயிற்றே! ஆகையால், தன்னுடைய ஆனந்தத்தை—வாஞ்சையை—வெளிக்காட்டாமல்தான் இருக்கிறாரோ?" என்று நினைத்தேன். "ஆனால் அதற்குள் அந்தமாதிரி, புலனுணர்வுக்கு அதீதமாகச் சாதாரண மனிதனால் அறிந்துகொள்ள முடியாத அந்த அன்பு—வெங்காயச் சருகு—வேண்டியதில்லையே!" என்றும் தோன்றிற்று.

அவர் வந்தார். பின்பு—அதை—அந்த முடிவை ஏன் கேட்கவேண்டும்? ஏன் எழுதவேண்டும்? என்னை அவர் அறிந்து

(அடுத்த பக்கம் பார்க்க)

# உலகம் பலவிதம்

"பாலி"

"நமஸ்காரம் ஸார், சௌகரியமா? என்ன ரொம்ப நாளாச்சே பார்த்து, இரண்டு மாசம் ஆயிருக்கும்."

"ஹூம்! கிடையவே கிடையாது. ஒரு மாசந்தான்."

"என்ன ஸார் அப்படிச் சொல்லுகிறீர்கள்? எங்கள் மாமா பிள்ளை ஊரிலே இருந்து கார்த்திகை மாசம் தானே வந்திருந்தான்..."

"ஆமாம், உங்க மாமா பிள்ளை ஊரிலே இருந்து கார்த்திகை மாசம் வந்தால் நான் உங்களைப் பார்த்து இரண்டு மாசம் ஆகியிருக்கணுமா?"

"இல்லே ஸார்! அவன் இங்கே வந்திருந்தபோது அவனை அழைத்துக் கொண்டு சைனு பஜாருக்கு போனேன்..."

"ஆமய்யா; அதுக்கென்ன? நீர் எங்கே வேணும்னாலும் அழைச்சுண்டு போமே, நரகத்துக்குத்தான் அழைச்சுண்டு போம் உம்மை நான் ஏன் என்று கேட்டேனு?"

"அதுக்கு இல்லேங்காணும். அவனை அழைச்சுண்டு ஹைகோர்ட் பக்கம் போனேன். அந்த சமயத்திலேதான் உம்மைப் பார்த்தேன்."

"அந்த சமயத்திலே எங்கேங்கணும் உம்மைப் பார்த்தேன்? நான் போனதரம் உம்மை எழும்பூர் பஸ் ஸ்டாண்டிலேன்னு பார்த்தேன்."

"அதற்கு முன்னுடி ஒருதடவை பார்த்ததைத்தான் இப்பச் சொன்னேன்."

"அட! இல்லேங்கணும்."

"சரி! போகட்டும், இப்போது அதைப் பத்திப் பிரமாதம் பண்ணுவானேன்? ஒழிஞ்சு போகட்டும். இங்கே பார்த்தீர்களா, ஆறுமணி யாகரத்துக்கு முன்னுடி குளிர ஆரம்பித்து விடுகிறது."

"அட மனுஷா! இதான் குளிரோ? எனக்கு வேர்வை தாங்கலே. காத்து வாங்கிண்டு வருவமென்று கிளம்பினேன். நீர் என்னடான்னு குளிருகிறது என்று சொல்லுகிறீரே. ஹே, ஹே!"

"என்ன ஸார்! அப்படிச் சொல்லுகிறீர்கள்? எனக்குக் குளிர் தாங்காமல் பாருங்கோ, கம்பளிச் சட்டை போட்டுக் கொண்டிருக்கிறேன்."

"இங்கே பாருங்கோ. நான் இந்தத் துண்டை வேணுமென்றாலும் எடுத்து விட்டு நடக்கிறேன் பாருங்கோ."

"சரி நான் அப்போ போய் வரட்டுமா, ஸார்."

"சந்தோஷம்."

"சுத்த செடு மூஞ்சிப் பயல். எதைச் சொன்னாலும் அதற்குத் தர்க்கம் சொல்லத்தான் தெரியும். அஹம்பாவம் பிடிச்சவன்."

"நல்லவேளை, தொலேந்தானு? அவனிடம் கொஞ்சம் இடம் கொடுத்துப் பேசினுல் 'டபக்' என்று ஆபத்து வந்துவிடும். எப்போது பார்த்தாலும் பிள்ளைக்கு வேலை பண்ணிக்கொடு என்று பிராணனை வாங்குகிறுன். யாரிடம் இருக்கு வேலை? சுத்த திராபைப் பயல்!"

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்ததாகத் தெரிந்தது, அவ்வன்புதானே! என் உள்ளத்திற்கு அவர் பதில் சொல்லவில்லை என்பதுதான் முடிவு.

எப்படியோ போகட்டும் அவர் இன்னும் என் நெஞ்சில் நிறைந்துதான் இருக்கிறுர். நான் செய்தது குற்றமா?... ஆம் நான் போய் அவரைக் கண்டு என் நெஞ்சைத் திறந்து காட்டினது குற்றம்தான்.

என் நெஞ்சை அன்பிற்கு அளவாக நான் வைத்தது சரியா? அதை வைத்துக் கொண்டு நான் அவரை ஏன் நிறுத்துப் பார்க்கவேண்டும்?

---

# வீரனின் ரத்தம்

(ஸ்ரீ க. வேங்கடாசலம்)

“ஏ, ராக்காயி, நான் வயக்காட்டுக்குப் போறேன். மதியத்துக்குக் கஞ்சி கொண்டாந்துடு. இன்னிக்கு மூணு கோட்டை விரப்பாடு உழணும்” என்று தூங்கிக் கொண்டிருந்த மனைவியிடம் கூறிவிட்டு கலப்பையைத் தன் தோளில் போட்டுக் கொண்டு அவன் வெளியேறினான். அப்பொழுது மங்கலான இருள் சரியாக அகலவில்லை. கிழக்கே வானம் வெளுத்துக் கொண்டிருந்தது. அவன் தன்னந் தனியாகவே நடந்துக் கொண்டிருந்தான். வரப்பு மேல் அதுவரை உல்லாசமாக உட்கார்ந்து “கிரீச்” “கிரீச்” என்று வாய் ஓயாமல் கத்திக்கொண்டிருந்த தவளைகள், காலடி சப்தங்கேட்டு “பொத்” “பொத்” தென்று தண்ணீரில் குதித்தன.

சுடலை முத்து சுடர் முத்துதான். கரிய மேனியானாலும் அதில் ஒரு வழு வழுப்பு. கருப்பில் அழகு என்பார்களே அப்படித்தான் சுடலையின் அழகும். அவன் முகம் நிர்மலமாயிருந்தது. அவன் நடையில் ஒரு ஒய்யாரம் தெரிந்தது.

அவனுடைய வயல் வந்துவிட்டது. ஏரில் மாட்டைப் பூட்டி ‘சால் சாலாக’ உழ ஆரம்பித்தான். தலையில் முண்டாசுக்கட்டு வெய்யில் தாக்காமலிருக்க. அவன் நெற்றி வியர்வை நிலத்தில் விழக் கஷ்டப்பட்டு உழுதாலும் அவனுக்கு அதன் வருத்தம் தெரியவில்லை. தொழிலாளியே அப்படித்தான்! “ஏப்பா, ஏப்பா, நம்ப நாயனா வாராரு” என்று கூறிக்கொண்டே சுடலையின் நாலு வயது மகள் லக்ஷ்மி, ஓடி வந்தாள்.

உடனே சுடலை, தன் தலையில் கட்டியிருந்த துணியை இடுப்பிற்குக் கொண்டு வந்து விட்டான்.

“நாயனா கும்பிடறேன்” என்று நாயனாவை இரு கைகளையும் கூப்பிக் கும்பிட்டான்.

* * *

சிவந்திப்பட்டி சிவசைலம்பிள்ளை என்றால் கலப்பையடிக்கிற முனியன் முதல் மிராசு பொன்னம்பலக் கவுண்டர் வரை பயப்படுவார்கள். பயம் என்றால் உங்கள் வீட்டு எங்கள் வீட்டுப் பயமா? ஆனால் அப்படிப் பயப்படும்படியான கோரஸ்வரூபியல்ல சிவசைலம். எப்பொழுதும் அவர் “குஷி” யாகவே யிருப்பார். எல்லோரிடத்திலும் காது குளிர இன்பமாகப் பேசுவார். அப்படியிருந்தால் கிராமத்தார் ஏன் அவரைக் கண்டு கிலியடைகின்றனர்? சிவசைலம் கர்நாடகப் பேர்வழியாயிருந்தாலும் நாகரீகத் திருடன். கொலை, களவுகளை, ரகசியமாகத் திரை மறைவிலிருந்து சாதித்து விடுவதில் கைதேர்ந்த ஆசாமி. அண்ணனை ஆற்றங்கரையில் இரண்டாம் பேருக்குத் தெரியாமல் எமலோகத்திற்கனுப்பிவிட்டுத் தம்பியிடம் போய்த் துக்கம்விசாரித்து வந்து விடுவார் என்றால் இன்னும் சொல்லவேண்டுமா?

* * *

“ஏண்டா, சொள்ளமுத்து, என்ன, இன்னிக்கு எத்தனை மரக்கால் உழுதிருக்கே?” என்று சிவசைலம் பிள்ளை அதிகார தொனியில் கேட்டார்.

அவருக்கிருப்பதெல்லாம் இந்த மூணு கோட்டை விரைப்பாடுதான்.

“இண்ணைக்கு எல்லா முடிஞ்சு விடும்” என்று சுடலை பதிலளித்தான்.

“அது சரி, சாயங்காலம் இன்றைக்கு வீட்டுக்கு வந்து விட்டுப் போ” என்று கூறிப் போய்விட்டார்.

* * *

அண்ணாவையருக்குப் பூர்வீகம் கொட்டாரக்குறிச்சி. ஆனால் சிவந்திப்பட்டிக்கு வந்து நாலைந்து வருஷங்களாகி விட்டன. புதுப் பணக்காரர். நாலுக் கோட்டை வெள்ளாண்மைக்காரராகிவிட்டார். வரும்போது தம் ஸகதர்மிணியின் மஞ்சள் காணியுடன் வந்தவர் இப்பொழுது முப்பது பேர்களுக்கு ‘நாயனா’ வாகிவிட்டார். சிவந்திப்பட்டியில் சிவசைலத்துடன் மோதாதவர் இவர் ஒருவர்தான். ஒரு நாள் சிவசைலம் தாசில்தார் வீட்டுக்குச்

சென்று விட்டு வரும் வழியில் அண்ணா வையங்காரைச் சந்தித்தார். அப்பொழுது சிவசைலத்திடம் அரைத் தம்பிடி கூட இல்லை. அண்ணாவையரைக் கண்டதும் "வாங்கோ, ஐயர்வாள், வாங்க, ஏது இப் படி வந்தாப் பிலே" என்று குசலம் விசாரித்து விட்டு ஒரு ரூபாய்க் காசுக்கு 'அடிப் போட்டார்.' ஐயரோ கடுத்தமான பேர் வழி. "துட்டாவது கிட்டாவது என் கிட்டே செப்புக் காசுகூட இல்லை" என்று முகத்தை முந்நூறு கோணலாக்கிக் கொண்டு போய்விட்டார்.

* * *

சிவசைலம் பிள்ளை தம் வீட்டில் 'ஹாய் யாக'க் கூடத்தில் உட்கார்ந்துக் கொண்டிருந்தார். முன்னால் சுடலைமுத்து கைகட்டி நின்று கொண்டிருந்தான்.

"எலே, சுடலே, அந்தப் பிச்சைக்காரப் அய்யன் என்ன நினைச்சுட்டான் பார்த்தியா" என்றார்.

"ஆமாஞ் சாமி, அவருக்குப் புதுப்பணம் கொஞ்சம் கொழுப்பு இருக்கத்தானே இருக்கும்" என்று பதிலளித்தான்.

"அவனை சரியா மாட்டி வைக்கணும்" என்று கூறிவிட்டு எதையோ ஆழ்ந்து யோசிப்பவர்போல பல்லால் விரலைக் கடித்துக் கொண்டிருந்தார். சிறிது நேரம் மௌனம்.

"அடே, இன்னிக்கு ராத்திரி நடுச் சாமத்திலே அந்த அய்யன் வயலைச் சுட்டுக் கொட்டை பறத்திடணும். அவ்வளவு கதிர் களையும் அறுத்து எறிந்துவிட நீ-தான் சரியான பயல். உடனே போ" என்று 'சமூகத்திலி'ருந்து உத்தரவு பிறந்தது.

சுடலையின் தலைமேல் ஒரு 'டன்' பாராங்கல் விழுந்திருந்தால் கூடச் சகித்திருப்பான். இதைச் சகிக்க முடியவில்லை. ஏன்? அண்ணாவையர் பேரில் அனுதாபமா? இல்லை. பயிரை வளர்த்தவனுக் கல்லவா அதன் அருமை தெரியும்? மலடிக்கு குழந்தையின் பாசம் தெரியுமா? விளையும் பயிரை அறுப்பதைவிட, தன் குழந்தையின் கழுத்தையறுக்கலாமே. ஏர் பிடித்து உழுது, கலப்பையடித்து, பரம் பிட்டு, எருப்போட்டு, விதை விதைத்து நாற்று நட்டு, கிராமத்துக் கிழவிகள் காதில் பொன்னகைகள் தொங்குவது போல் நெற்கதிரைத் தாங்கி நிற்கும் பயிரை துவம்சம் செய்வதைவிட.........
...............மேல்! இன்னும் சில நாட்களில் அறுவடைக்குத் தயாராகிவிடும். அக் கதிர்கள் இப்பொழுது அறுபட்டால்......
.........பிடி வைக்கோலுக்கும் உதவாமல் போகுமே, என்று நிமிஷத்திற்கு நானூறு எண்ணங்கள் அவன் மனதில் தோன்றி மறைந்தன.

"ஏண்டா, சும்மா மௌனம் சாதிக்கிறே"

"சரி, எசமான், உத்தரவு" என்று கூறிக்கொண்டு வெளியேறி விட்டான் சுடலை.

நேராக வீட்டிற்குச் சென்றான். அவன் உடல் மட்டும் பொம்மைபோல் நகர்ந்து சென்றது. நடைப்பிணமாகவே நடந்தான். அவன் மனத்தைப் பல எண்ணங்கள் அறுத்தன.

வீட்டிற்குச் சென்றான். மனைவியும் குழந்தையும் அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருந்தனர். அவர்களை எழுப்ப அவன் துணியவில்லை. ஒரு நெற்றி மட்டக்கம்பையும், புல்லரிவாளையும், எடுத்துக் கொண்டு வெளியேறினான்.

அவன் அண்ணாவையர் வயலை நாசமாக்க விரும்பவில்லை. சும்மா நடந்து சென்றான். கும்பிருட்டு. எதிரே வருகிற ஆள் தெரியாது. ஆனாலும் சுடலைமுத்து வரப்பின்மீது விரைவாக நடந்துக் கொண்டிருந்தான்.

இவ்விதம் சிவசைலம் செய்வாரென்றே அண்ணாவையர் இரண்டு நாட்களாக இரு தேவர்களைக் காவல் வைத்திருந்தார்.

"யாரது?" என்று ஏககாலத்தில் இருகுரலைக் கேட்டு சுடலை திடுக்கிட்டு நின்றான்.

"ஏன், நான் சொள்ளமுத்து" என்று தைரியமாய்ப் பதிலளித்தான்.

அவ்வளவுதான் அவனுக்குத் தெரியும். மறுகணம் 'ஓ'வென்றலறிக் கீழே விழுந்தான் சுடலை. அவன் மண்டையை இரு முரட்டுத்தடிகள் பலம் பார்த்து விட்டன. அடித்தவர்கள் உடனே ஓட்டம் பிடித்து விட்டனர். ரத்தம் 'கள' 'கள' என்று ஒழுகியது. அண்ணவய்யர் வயலில் சுடலையின் ரத்தம் பாய்ந்தது.

"என்னோடாவது இந்த அக்கப்போர் நிற்குமா? நாயனமார்கள் ஒத்துமையா யிருக்கணுமே!" என்ற வார்த்தைகள்

(614-ம் பக்கம் பார்க்க)




## பூர்வ கதை

பெரிய பணக்காரரான கண்டிராக்டர் லம்போதர முதலியார் மனைவியை இழந்தவர் தன் தாயார் பிள்ளை, மருமகள்—இவர்களுடன் வசித்துவந்தார். முதலியாரின் தாயார் தேவானையம்மாள் தாயற்ற குழந்தைகள் இருவரையும் அன்பாய் வளர்த்து வந்தாள். மருமகள் புனிதவதியின் தாயார் சிறு வயதிலேயே காலமாய் விட்டபடியால் அவளை வளர்க்கும் பொறுப்பு முதலியார் பேரில் விழுந்தது. புனிதவதியும் முதலியார் புத்திரனான தணிகைவேலனும் ஒரே வயதினர். சேர்ந்தாற்போல் காலேஜுக்குப் போவார்கள். எப்போதும் ஒன்றாகவே இருப்பார்கள். புனிதம் தணிகைவேலனைக் காதலித்தாள்.

இந்த சந்தோஷமான குடும்பத்தை விட்டுவிட்டு அடுத்த வீட்டுக்கு வருவோம். அது பாப்பாத்தியம்மாள் வீடு. சிறு வயதில் பாப்பாவை லம்போதர முதலியாருக்குக் கொடுப்பதாயிருந்தது. ஆனால் பாப்பாவின் தாயார் மறுத்துவிட்டாள். பாப்பாவின் துரதிருஷ்டம் எங்கே போயிற்று? கடைசியில் அவள் ஓர் குடிகார ஜாகீர்தாருக்கு வாழ்க்கைப்பட்டு விதவையானாள். பாப்பாவுக்கு ஒரு பெரிய புதல்வனும் இரு சிறு குழந்தைகளும் உண்டு. சிவக்கொழுந்து என்பவன் அந்த மூத்த சற்புத்திரன்! அவன் போகாத சினிமாக் கொட்டகை பாக்கியில்லை! குதிரைப் பந்தயமில்லை! இதனால் பாப்பா மனம் புழுங்கினாள்.

முதலியார் மனம் வைத்தால் பாப்பாவின் கஷ்டங்களுக்கு விமோசனம் உண்டாகும். ஆனால் பாப்பாவுக்கு சிறு உதவிகள் செய்யக்கூட பயப்பட்டார் முதலியார். ஊரில் ஏதாவது புரளி ஏற்பட்டு பாப்பாவின் கௌரவத்திற்குக் களங்கம் உண்டானால் என்ன செய்வது என்று அஞ்சினார். முதலியாரும் தேவானையம்மாளும், புனிதவதியும் பாப்பாவின் நிலைமையைக்கண்டு பரிதாபப் பட்டார்கள்.

புனிதவதியின் தாயும் பாப்பாவும் ஒரே வயதினர். இணைபிரியாமல் இருந்தவர்கள். ஆகையால் பாப்பா புனிதத்திடம் அன்பாயிருந்தாள். புனிதத்திற்கு பாப்பா என்றால் உயிர்.

புனிதம் தணிகைவேலனைக் காதலித்தாளல்லவா? ஆனால் தணிகைவேலன் தன்னைக் காதலிக்கிறானா என்பதை அவளால் அறிய முடியவில்லை. ஒருநாள் புனிதம் ஓர் இன்பக் கனவு கண்டாள். தனக்கும் தணிகுவுக்கும் கலியாணம் ஆகிவிட்டது போல் கனவில் கண்டு இன்பமடைந்தாள்.

மறுநாள் அவள் கட்டியிருந்த மனக்கோட்டை இடிந்து விழுந்ததை உணர்ந்தாள். டென்னிஸ் விளையாடிவிட்டு வந்த தணிகு தோட்டத்தில் சண்பக மரத்தடியில் தலையைக் கோதிக்கொண்டு உல்லாஸமாய் உட்கார்ந்திருந்த புனிதத்தைச் சந்தித்தான். ரகஸ்யமாக ஒரு கேள்வி கேட்க விரும்பினான். அப்போது புனிதத்தின் கன்னங்கள் சிவந்தன. என்ன கேட்கப் போகிறான்? கல்யாண விஷயத்தைத்தான் கேட்கப் போகிறான்! வேறு என்ன ரகஸ்யம் புனிதத்திடம் இருக்கப் போகிறது? ஆதலால் அவள் நாணமடைந்ததில் ஆச்சர்யமில்லையல்லவா?

தணிகு அவன் கலியாண விஷயத்தைப் பற்றித்தான் கேட்டான். ஆனால் அது எவ்வளவு எதிர்பாராத திகைப்பைக்

கொடுத்தது புனிதத்திற்கு? புனிதத்தின் வகுப்புத் தோழியான சிவகாமியை தனக்கு அப்பா நிச்சயம் செய்திருக்கிறரென்றும் அவள் எப்படிப்பட்டவளென்றும் அவன் புனிதத்திடமே கேட்டால் திகைப்பை உண்டாக்காமல் என்ன செய்யும்? இயந்திரம் போல் புனிதம் ஏதோ பதில் சொல்லிவைத்தாள். தணிகு போனதும், புனிதம் வருத்தம் தாங்காமல் ஸ்தம்பித்து உட்கார்ந்திருந்தாள். அந்த சமயத்தில் முதலியார் அங்கே வந்து "ஏனம்மா தனியாய் உட்கார்ந்திருக்கிருய்?" என்று கேட்டார். (இனிமேல் படிக்கலாம்)

4

## இடியும் மின்னலும்

"புனிதம்! நீ ஏனம்மா இன்னும் தலை சீவிக்கொள்ளவில்லை? இந்தச் சேலை வேண்டாம். வேறு நல்லதாய் ஏதாவதொன்றை உடுத்துக்கொள். நேற்று வாங்கி வந்தேனே அந்த ஜார்ஜெட் ரவிக்கையைப் போட்டுக்கொள். எல்லாரும் இருந்திருந்தால் எவ்வளவோ விமரிசையாய்த்தான் நடக்கும்; அதற்காக நீ ஏனம்மா வருந்துகிருய்? நானே எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டேன். நீ ஏன் விசனப்படுகிருய் அம்மா! எழுந்திரு, எழுந்திரு, சீக்கிரம் போய் நிச்சய தாம்பூலம் செய்துவிட்டு வந்து விடுவோம்" என்று பெருமூச்சுடன் கூறினர் முதலியார்.

"இல்லை, மாமா! தலைவலி ஒரே யடியாய் மண்டையைப் பிளக்கிறது. நான் வராவிட்டாலென்ன? சம்பந்தமுதலியார் வீட்டார்கள் நமக்கென்ன புதியவர்களா? நீங்களும் பாட்டியம்மாளும் போனால் நான் இங்கே வருகிறவர்களுக்குத் தாம்பூலம் கொடுத்துக்கொண்டிருக்கிறேனே" என்று மிகுந்த தீனஸ்வரத்துடன் கூறினாள் புனிதம். அவள் குரல் கரகரத்திருந்தது.

"சே! சே! உடம்பு சுகமில்லாவிட்டாலும் நீ வரத்தான்வேண்டும். நம்ம வீட்டிலிருந்து மஞ்சள் குங்குமம் எடுத்து வைக்கக்கூட ஒருவருமில்லையே. பார்ப்பவர்கள்தான் என்ன நினைப்பார்கள்? வந்த பிறகு கொஞ்சம் நேரம் மாடியில்போய் படுத்துத் தூங்கு. எழுந்திரு" என்று சொல்லியவராய் கூடத்திற்குச் சென்றுர் முதலியார். புனிதத்தைப் பார்க்கும் பொழுதெல்லாம் இன்னதென்று சொல்ல முடியாத ஒரு சோகத்தின் சாயை அவர் மனத்தில் தோன்றி மறைந்தது.

புனிதம் எழுந்து உள்ளே சென்றுள். சேலையை எடுக்கும்பொழுதே அவள் கை நடுங்கிற்று. நெஞ்சும் மார்பும் படபட வென்று அடித்துக்கொண்டது. அழுகை மீறிக்கொண்டு வந்தது.

"ஏனம்மா! நேரமாகிறதே. புனிதம்! கார் வந்துவிட்டதே என்று முதலியார் உரத்த குரலில் கூப்பிடுவது கேட்டுத் திடுக்கிட்டாள். அவசரமாய் எழுந்து புறப்படச் சித்தமானுள் புனிதம். தேவானையம்மாள் ஏதோ முணுமுணுத்த வண்ணம் வெற்றிலை, பழம் முதலியவைகளை எடுத்து வைத்துக்கொண்டிருந்தாள்.

* * *

அன்றிரவு முழுதும் புனிதம் தூங்கவேயில்லை. தணிகைவேலனின் மணக்கோலமும், அவன் முகத்தில் தோன்றிய இள நகையும், அவள் மனதிற் தோன்றித் தோன்றி சகிக்க முடியாத வேதனையை உண்டு பண்ணின. விஷவேகத்தினுல் வருந்தும் நோயாளியின் உடல் போல் அவள் உடல் துடித்தது. மழை பாட்டம் பாட்டமாய்ப் பெய்வதே போல், சற்று விம்மி யழுவதும், மறுபடி சற்று அடங்குவதும், மறுபடி பொங்கி எழுவதுமாய், பரிதவித்துக் கொண்டிருந்தாள்.

அன்று பூர்ணிமை. நல்ல நிலா. நீல வானில் மெல்லமெல்ல மிதந்து வந்துக் கொண்டிருந்தான் சந்திரன். நிலவின் பேரொளியினுல் உலகமே மயங்கிக் கிடந்தது. எப்பொழுதும் நிலவைக் கண்டு விட்டாற் போதும். ஆனந்தமாய்ப் பட்சி போல் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் திரிவாள் புனிதம். அன்று, அந்தச் சந்தோஷகரமான இரவில், கைகளில் முகத்தைப் புதைத்தவளாய்ப் படுத்திருந்தது, தணிகை வேலனுக்கு மிகுந்த ஆச்சர்யத்தை உண்டுபண்ணிற்று.

ஒரே வீட்டில், ஒரே இன்பமயமான நிலவில், இனிமையான வருங்கால நிகழ்ச்சிகளைக் கற்பனை செய்த வண்ணம் உற்சாக மிகுதியினுல் தூக்கம் வராமல் தணிகு களிக்க, அதே வீட்டில், அதே நிலவில், அதற்கு நேர்மாருக, துயர மிகுதியினுல்,

படுக்கையிற் புரண்டு புரண்டு தவித்துக் கொண்டிருக்கிறுள் புனிதம்.

"என்ன! புனிதம்! ஏன் உனக்கென்ன? உடம்பு சுகமில்லையா? தலை நோவா?" என்று கேட்டுக்கொண்டே அவள் படுத்திருக்கும் அறைக்குள் நுழைந்தான் தணிகை வேலன். அவள் வாயே திறக்கவில்லை.

"என்ன! புனிதம்! பேசக்கூடாதா? ஏம்மா! உனக்கென்ன செய்கிறது? சொல்லேன்" என்று மிகுந்த பரிவுடன் கொஞ்சிக் கேட்கலானுன் தணிகை வேலு.

புனிதம் கொஞ்சம் சமாளித்துக் கொண்டாள். "ஒன்றுமில்லை தணிகு! எவ்வளவு செல்வமும் செல்வாக்கு மிருந்தாலும் அம்மாமியும் அத்தையுமிருந்து பார்ப்பதற்கில்லையே என்று எண்ணினேன். அவ்வளவுதான், என்னையும் மீறி என் மனம் கலங்கிவிட்டது" என்று சொல்லுகையில்....அழுகை பீறிட்டுக் கொண்டு வந்துவிட்டது. விம்மி விம்மி அழலானுள் புனிதம்.

"என்ன புனிதம்! அந்த வருத்தம் எனக்கில்லையா? சிறு குழந்தைபோல் அழுகிருயே? இந்தமட்டும் நீயும் பாட்டியம்மாளுமாவது இருந்து சந்தோஷிக்கும் நிலைமையிலிருக்கிறீர்களே யென்று திருப்தியடைவதை விட்டு, வீணுய், சிறு குழந்தைபோல் தேம்பித்தேம்பி அழுகிருயே! இப்படி அழுதால் உடம்பு என்னத்திற்காகும்? சே, இதென்ன அசட்டுத்தனம்" என்று கூறியவனுய் அருகிலிருந்த ஒரு பெஞ்சியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தான்.

இவ்வளவு பரிவுடன் கேட்டதனுலோ என்னமோ, அவள் மனம் சற்று அமைதியடைந்தது. ஆனுலும் தலையை நிமிராமலே, "வேறென்றுமில்லை. தணிகு. உடம்பு சரியாயில்லாததனுல் வெகு சீக்கிரத்தில் அழுகை வந்து விடுகிறது. எனக்குத்தான் இன்று காலையிலிருந்தே அசாத்யத் தலைநோவு என்று சொன்னேனே."

"அப்படியானுல் அதை இன்னும் அதிகரிக்கச் செய்துக் கொள்ளுகிறதற்காகவா அழுகிருய்? நீ இப்படி அழுதுகொண்டே இருந்தால் நான் 'ஆயா'விடம் சொல்ல வேண்டியது தான். எழுந்து, கொஞ்ச நேரம் நல்ல காற்றிலே உலாவினுல் தலைவலி குறையும். எழுந்திரு" என்றுன் தணிகு.

"நேரமாயிற்று. நீ போய்த் தூங்கு. இன்னும் சற்று நேரமானுல் என் தலை நோய் தானே நின்றுவிடும்....." என்பதற்குள் "அடே தணிகு! அடி புனிதம்! இன்னுமா தூங்கவில்லை? உடம்பு என்னத்திற்காகும்? கிழவன் பேச்சைக் கிண்ணுரக்காரன் கேட்பானு? நாளைக்குக் காலைத் தலையை நொந்தால் தெரியும். என்னடா தணிகு! நடுநிசி வரையில் என்ன வம்படிக்கிருய்? நீயும் தூங்காமல் அவளையும் தூங்கவிடாமல்?" என்று மிகுந்த அதிகாரத்துடன் கூறினவளாய் உள்ளே நுழைந்தாள் தேவானையம்மாள்.

"இல்லை பாட்டி, அவள் அழுதுகொண்டு படுத்திருந்தாள். என்னவென்று கேட்கலாமென்று எழுந்து வந்தேன்" என்பதற்குள், "எனக்குத் தெரியுமே, வயது வந்த பெண். தனியாய் மரத்தடிக்கும், மாடிக்கும், தோட்டத்திற்கும், போகாதே, போகாதே, என்று நூறு தடவை சொன்னேன். கேட்டால் தானே, என்ன சங்கதியோ? ஏதாவது முனி,கினி, பேய், கீய் என்னத்தையாவது கண்டு பயந்து விட்டாளோ என்னமோ?" என்று ஒரே ஓட்டமாய் புனிதத்தின் படுக்கையருகில் வந்து நெற்றியிலும் மார்பிலும் புறங்கையை வைத்துப் பார்க்கலானுள் தேவானையம்மாள்.

"இல்லை. எனக்கொன்றுமில்லை. தலை நோவு தாளாமல் அழுது விட்டேன். வேறென்றுமில்லை. நீங்கள் போய் தூங்குங்கள்" என்றுள்.

அவள் நிலைமையைக் கண்ட தேவானையம்மாள் பயந்து விட்டாள். மகள் இறந்ததும், மருமகள் இறந்ததும், ஒன்றன்பின் ஒன்றுய் நினைவில்வர, புனிதத்தைத் தேற்றுவதாக மனதிலெண்ணிய அவள் "அடி புனிதம் அழாதேடியம்மா! அடி என் கிளியே என்கண்ணே!" என்று தானும் அழத் தொடங்கினுள் தேவானையம்மாள்.

"அம்மா! அம்மா! இதென்ன இது?" என்று கேட்டுக்கொண்டே எழுந்து வந்தார் லம்போதர முதலியார்.

"இந்தப் பெண்ணைப் பாரடா! அழுது அழுது முகம் வீங்கிக் கிடக்கிறது. அறியாதது. தனியாய் இங்கேயும் அங்கேயும் போகக்கூடாதென்று படித்துப் படித்து

கிளிப் பிள்ளைக்குச் சொல்கிறாப்போலச் சொன்னேன். யார் கேட்டார்கள்? இப்பொழுது ஒன்று கிடக்க ஒன்றாய் ஏதாவது வந்து சேர்ந்தால், ஐயோ முன்னேயே தெரியாமற் போயிற்றே என்று தவிக்கிறது. எல்லாம் நீ கொடுக்கிற 'செல்லம்'தான். பார் எப்படித் தானிருக்கிறாளென்று. கேட்டால் ஒன்றும் சரியாய்ச் சொல்லமாட்டேனென்கிறாள். நமக்கெல்லாம் இல்லாத துக்கமா இவளுக்கு. என்னமோ ஒற்றைக் கருவேப்பிலைக் குச்சி, "ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு" என்று உற்று உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். இவளும் அழுதுகொண்டு தூங்கவேயில்லை. அந்தத் தடியனும் தூங்கவேயில்லை. மணி இரண்டு. போய்த் தூங்கடா. போடா! அடே உன்னைத் தான்." என்று ஒரே மூச்சிற் கூறிமுடித்தாள் தேவானையம்மாள்

தணிகை வேலு எழுந்து மெதுவாய் நடந்து, தான் படுக்கும் அறைக்குச் சென்றான். என்னதான் தூங்க வேண்டுமென்று பலவந்தமாய்க் கண்களை மூடின போதிலும், தூக்கம் வந்தால்தானே? புனிதத்தைப்பற்றி நினைக்கும் பொழுதெல்லாம் இன்னதென்று விளங்காத ஒரு வேதனையினால் அவன் மனம் குழம்பிற்று. அவள் துயரம், அவன் மனதை வாள் கொண்டறுப்பதுபோல் தோன்றிற்று. அவள் தன்னிடம்வைத்துள்ள பேரன்பை எண்ண எண்ண, அவள் துன்புறுவதற்கு, தானே காரணம், என்று ஒரு சிறு மின்னொளிபோல் ஒரு எண்ணம் அவன் மனதில் தோன்றி மறைந்தது. ஆனால் விரிவாய் விளங்கவேயில்லை.

(தொடரும்)

(610-ம் பக்கத் தொடர்ச்சி)

அவன் உதட்டை விட்டுப் பிரிந்தன. அவை வரப்பில் ஓடும் தண்ணீரின் 'கல கல' என்ற சப்தத்தோடு கலந்தன.

விடியற்கால மாகிவிட்டது. சிவசைலம் தன் ஆள் செய்த வேலையைப் பார்க்கப் புறப்பட்டார். வயலோரம் சென்றபோது ஒரு வெள்ளைத் துண்டு வரப்பின்மேல் கிடந்தது. அவர் மனம் 'திக் திக்' கென்று அடித்துக்கொண்டது. ஓடிப்போய்ப் பார்த்தார். ஹா! அவர் கண்களை நம்ப முடியவில்லை. சுடலை! சுடலை!! சுடலை ரத்தக் காய்த்துடன் அங்கே மயங்கிக் கிடந்தான். "ஐயோ" என்று விம்மியழுதார். தன்னைத் தானே நொந்துக் கொண்டார்; தன் ஏவுதலல்லவா சுடலையின் உயிருக்கு ஆபத்தாய் விட்டது, என்று எண்ணியபொழுது அவர் கண்ணிலிருந்து ஒரு ஆறு புறப்பட்டுச் சுடலையை நனைத்தது.

உடனே காலதாமதமின்றி சுடலையை எடுத்து வண்டியில் போட்டுக்கொண்டு வைத்தியர் வீட்டுக்குக் கொண்டு போனார் முத்து பிழைத்துக்கொண்டான். ஆனால் கால் முறிந்து முடமாய் போய்விட்டது. பாவம், அவன் ஒரு வேலையும் செய்ய லாயக்கில்லை.

அவன் மனைவிக்கும், மகளுக்கும், தேறுதல் கூறித் தன் பாவத்திற்குப் பிராயச் சித்தமாக ஒரு கோட்டை விரப்பாட்டை அவர்களுக்கு ஜீவனாம்சத்திற்கு எழுதி வைத்தார், சிவசைலம்,

அன்றிருந்து சிவசைலம்பிள்ளை ஊருக்கு ஊழியனாகி விட்டார். அவரிடம் குடிகொண்டிருந்த துர்ப்புத்தி எங்கேயோ ஓடிவிட்டது.

* * *

அடுத்த தைமாதம். அறுவடைக்காலம். அண்ணாவையர் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார். நல்ல கதிரும் பொதியுமாக விருந்த நெற்பயிர்களைக் கண்டு மனம் பூரித்தார்.

அறுவடை ஆரம்பமாகி விட்டது. எழுபது கூலிஆட்கள். ஆண், பெண், சிசு அடங்கலாக புல்லரிவாளால் நெற்பயிரை யறுக்குங் காக்ஷியை வர்ணிக்க ஒரு கம்பனோ, காளிதாசனோ தான் பிறக்கவேண்டும்.

களத்திற்கு நெற்கதிர்கள் வந்து குவிந்து விட்டன. ஒன்பது மாடுகள் சுற்றிச் சுற்றி அவற்றை மிதித்தன. அண்ணாவையரின் ஆள் சுப்பன் நெல்லைக் கையில் எடுத்துக் கசக்கிப் பார்த்தான். அந்தோ! ஒரு அரிசிகூட இல்லை. ஒருதரம், இரண்டு தடவை பார்த்தான். அப்படியே போய் விட்டது.

நேராக ஆண்டை வீட்டுக்கு ஓடினான். "சாமி நெல் அவ்வளவும் சாவியாப் போச்சு" என்றான்.

அந்த வயலில் உண்மைவீரன் சுடலை முத்துவின் ரத்தத்தை யல்லவா பாய்ச்சியிருந்தார்கள். அது சாவியாகாமலிருக்குமா?

விமர்சனம்

# "ராஜா கோபிசந்த்"

(ஸ்ரீ ரா. ஆறுமுகம்)

நம் தமிழ் நாட்டில் தயாரித்த எத்தனையோ புராணப் படங்களைப் பார்த்துச் சலித்துப்போயிருக்கும் நமக்கு, வட நாட்டிலிருந்து ஏதேனும் ஒன்று வந்தால், அது எப்படித் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்று பார்க்க ஆவல் எழுகிறது. அநேகம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்த ஒரு பெரிய மஹானின் திவ்யசரித்திரத்தை இன்று பேசும் படமாக பூனா சரஸ்வதி சினிடோன் தயாரித்திருக்கிறது. இதைப்பார்த்ததும், நம் நாட்டிலும் இதுபோன்ற மஹான்கள் சரிதம் குவிந்து கிடக்கிறதே; ஆனால் அதைச் சரியாய்க் கையாளத்தகுந்த டைரெக்டர்கள் இங்கு இல்லையே என்று வருந்தவேண்டியதாயிருக்கிறது.

கதை :—ஹெலாபட்டம் என்ற நகரின் அரசன் ராஜா கோபிசந்த் (சந்திரகாந்த்). அவன் அன்னை மைனாவதி, (ரத்னபிரபா) தன் குலகுருவாகிய ஜலந்திரர் (தின்கர்) என்ற யோகீஸ்வரரிடம் தன் அரண்மனையிலேயே ஞானமார்க்கத்தைக்கற்று வருகிறாள். ஒரு தினம் கோபிசந்த் வழக்கம் போல் பணிப் பெண்கள் பலரால் நீராட்டுவிக்கப்பெற்று, ஆடம்பரமாய் அலங்கரித்துக் கொண்டு, கம்பீரமாய் அரண்மனைக்குள் நடந்து வருவதை மைனாவதி உப்பரிகையினின்றும் கண்ணுற்று, "மானிடதேகம் அநித்யம். என் மகனின் இந்த மலைபோன்ற தேகமும் ஒரு நாள் மண்ணாவது நிச்சயம். அப்படியிருக்க இவன் என் என்றும் அழியாத இன்ப நிலையை அடைய முயற்சிக்காமல் இவ்விதம், கேவலம் இராஜ போகங்களிலேயே அழுந்திக்கிடக்கிறான்" எனக் கண்ணீர் வடிக்கிறாள். அதில் ஒரு சொட்டு அவன் தோளை நனைக்கிறது. ஏறிட்டுப்பார்த்து, உப்பரிகைக்கு ஓடி அவளது மனோ பீஷ்டத்தை நிறைவேற்ற உடனே சந்நியாசியாகிவிடுவதாக உறுதி கூறுகிறான். அவன் உறுதிமொழி கேட்ட அவன் இளையமனைவி ரதன்குவர் (உஷா) என்பவள் அவன் மனதைமாற்ற ஒரு உபாயம் தேடுகிறாள். ராஜமாதா மைனாவதி ஜலந்தாரிடம் கள்ள நட்புக்கொண்டு அந்நட்பை அதிகப்படுத்திக் கொள்ளவே அவரைத் தன் அரண்மனையிலேயே வைத்திருப்பதாக ஒரு வதந்தியைக் கிளப்பிவிடுகிறாள். அரசனிடமும் இதைப்பற்றி ஜாடையாகத் தெரிவிக்கிறாள். அரசன் இதை முதலில் நம்பவில்லையாயினும் அரண்மனையில் பலரும் கூடிக் கூடிப் பேசுவதைக்கண்டு சந்தேகமுற்று ஜலந்தரர் இருக்குமிடம் சென்றுபார்க்க, அந் நள்ளிரவில் அவர் மைனாவதிக்கு ஏதோ மந்திரங்களை இரகசியமாக காதில் உபதேசம் செய்வதையும், அவள் அவர் கால்களை முத்தமிடுவதையும், தப்பர்த்தமாகக் கொண்டு, மைனாவதி அவரைப்பிரிந்ததும், கோபிசந்த் அவரைக் கிணற்றில் தூக்கி எறிந்துவிடுகிறான். இதை ஞான திருஷ்டியால் அறிந்த ஜலந்தரரின் சிஷ்யன் கனீப் (லோந்தே) மற்ற சிஷ்யர்களையும் அழைத்துக்கொண்டு அரண்மனைக்கு வரும் வழியில், தன்னைத்தடுத்த போர் வீரர்களையெல்லாம் தன் மந்திர பலத்தால் பெண்களாகமாற்றி, கோட்டை வாசல்களையும் இடித்து, தகரச்செய்து உள்ளே பிரவேசித்து, அரசனைக்கடிந்து அவனைக் கொல்லப்போகும் சமயம் அரசனின் மூத்த மனைவி லோமாவதி (லீலா)யும், அவனின் அன்னை மைனாவதியும் அவனை மன்றாடி உயிர் பிச்சைக் கேட்கிறார்கள். அவர்கள் விருப்பப்படியே கோபிசந்தை மன்னித்து தன் குருவாகிய ஜலந்தரரையும் கிணற்றிலிருந்து கரையேற்றி, அரசனையும் தன் போன்ற சிஷ்யனாகமாற்றித் தன்னோடு அழைத்துக் கொண்டு செல்கிறான். இதுதான் கதைச் சுருக்கம்.

நடிப்பில் முதல் ஸ்தானம் வகிப்பவர் ஜலந்திரரின் சிஷ்யனாக வருபவர்தான். சாஸ்திரோக்தமாக ஒரு குருவிடம் ஆச்ரமத்தில் அவர் ஆசிபெற்று, உபதேசம் பெறும்பொழுது ஒரு சிஷ்யன் எவ்வளவு பணிவாக நடந்து கொள்ளவேண்டுமோ அவ்வளவு பணிவாகவும், பயபக்தியோடும் நடந்து கொண்டு ஞான முதிர்வுபெற்று வெளியேறும் போது அவனுக்கு ஏற்படும் முககாந்தியை இந்த நடிகரிடத்தில் அப்படியே காண்கிறோம்.

சங்கீதத்தில் முதல் ஸ்தானம் வகிப்பவர் கோபிசந்தின் முதன் மனைவியாக வரும் லலிதா என்பவர்தான். செவிக்கினிய மதுரமான, கோகிலகானமென்பது இன்னதென்று தெரியாதவர்கள் இவர் பாட்டைக் கேட்டால் போதும். ரத்னப்பிரபாவும் அழகாகவே பாடியிருக்கிறார். பொதுவாக, இப்படம் விளம்பரங்களில் காணப்படுவதுபோல் 'ஒரு சங்கீத விருந்து' தான் என்பதில் சந்தேகமே இல்லை.

# புத்தக விமர்சனம்

### கமால் அத்தாதுர்க்

(வெ. சாமினாத சர்மா. பிரசுரகத்தர்கள் : பரத்பந்தர், ரங்கூன்)

கமால் பாஷாவின் வரலாற்றையும், அவர் துருக்கிக்குச் செய்த மஹத்தான சேவைகளேயும், துருக்கியின் இலக்கிய, பொருளாதார, சமூக மறுமலர்ச்சியையும் இனிய தமிழில் எடுத்து எழுதியிருக்கிறார் ஸ்ரீ சாமிநாத சர்மா. ஐரோப்பாவின் நோயாளி என்று கூறப்பட்ட துருக்கி தேசத்தை வனப்பும் வலிவும் மிகுந்த நாடாகச் செய்த பெருமை கமால் பாஷாவினுடையது. இத்தகைய ஒப்பற்ற கார்யத்தில் எவ்வளவோ இடையூறுகள் வந்து குறுக்கிடுவது சகஜம். ஆனுல் கமால் தன் விடா முயற்சியாலும் ஊக்கத்தாலும் எதிர்த்து வெற்றி பெற்றார்.

தேசத்தின் முன்னேற்றத்துக்குத் தடையாயிருப்பது குருட்டு நம்பிக்கையும் மூடப் பழக்கங்களும் என்பதை அறிந்து கமால் அவைகளைத் தகர்த்தெறிய முற்பட்டார். இது இலகுவான கார்யமல்ல, நாலா திக்கிலிருந்தும் ஆக்ஷேபம் கிளம்பும். சுயநலக் கூச்சல் அதிகமாகும். மதத்தின் பேரால் குழப்பங்கள் எழும். அப்படியே கமாலுக்கும் எதிர்ப்பு உண்டாயிற்று. ஆனுல் எதிர்ப்பை தேசத்தின் நிமித்தம் நசுக்கினுர்.

துருக்கியின் சரித்திரத்திலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. ஏனெனில் பழைய துருக்கியைப் போலவே நம் தேசத்திலும் சில விஷயங்களில் குழப்பம் இருக்கிறது. துருக்கி என்னென்ன தியாகங்கள் செய்து விடுதலை அடைந்ததோ, அவை நமக்கு வழிகாட்டியா யிருக்கும்.

கமால்பாஷா துருக்கிக்கு மட்டும் வழிகாட்டியல்ல, பிற்போக்கான எல்லா தேசங்களுக்கும் அவர் வழிகாட்டி. அவர் எடுத்துக்கொண்ட காரியத்தை முடித்து 'குன்ருத நம்பிக்கையோடு கமால் கண்மூடி' ஞர். அந்த குன்ருத நம்பிக்கை துருக்கிக்கு மட்டுமல்லாமல் சுயேச்சைக்காகப் பாடுபடும் எல்லா தேசங்களுக்கும் வீரம் அளிக்கக்கூடியது.

பல சிக்கலான சம்பவங்களேயும், பிரச்னைகளேயும் மிகவும் தெளிவாக எடுத்துக் கூறி யிருப்பது பாராட்டுதற்குரியது.


ஐரோப்பிய நாடுகளேயும் அதன் சரித்திரங்களேயும் தமிழர்கள் தெரிந்து கொள்ளும்படி ஆசிரியர் பல புத்தகங்கள் எழுதி யிருக்கிருர். இத்தகைய புத்தகங்கள் தமிழரின் அரசியல் அறிவை வளர்த்து சரியான பாதையில் செலுத்து மென்பதில் சந்தேகமில்லே.

---

### ஆசிரியர் அறிக்கை

முக்கியமாக கிராமப் புனருத்தாரணத்தைப் பற்றியும், பொதுவாக ஸ்தல ஸ்தாபன, ரோட்டு, ரயில் சௌகரியா சௌகரியங்களேப் பற்றியும், நேயர்கள் தங்களுக்குத் தோன்றும் ஆலோசனைகளே நமக்குச் சுருக்கமாக எழுதி அனுப்புமாறு கோருகிருேம். அந்த யோசனே நமது சமூக வாழ்வின் எந்த அம்சத்தைக் குறித்தாகிலும் இருக்கலாம்; தனி நபரைக் குறித்துமட்டும் இருக்கக் கூடாது.

ஆசிரியர்




# பூனைக்குட்டி

எங்களுடைய அக்காள் புருஷனுக்கு மைசூர் ரயில்வேயில் ஒரு சிறு ஸ்டேஷனில் ஸ்டேஷன் மாஸ்டர் வேலை. அது காட்டுப் பிரதேசத்திலிருக்கும் ஒரு சிற்றூர். ஸ்டேஷன் மாஸ்டர், டிக்கட் கலெக்டர், கூட்ஸ் கிளார்க், எல்லாம் எங்கள் அத்தம்பேர்தான். அவருக்கு அந்த ரயில்வே பிரிவு லயனுக்குள்ளேயேதான் மாற்றல்களும். அவரும் ஒரு ஷட்டில் வண்டிபோல அந்த ஸ்டேஷன்களின் நடுவே திரும்பித்திரும்பி வந்து போய்க் கொண்டிருப்பார். அங்கே இரவு வண்டிகள் கிடையாது.

கொர்னெஹள்ளி என்ற ஊரில் காட்டுமிருகங்கள் பயம்கூட உண்டு. வீட்டில் மான் குட்டி வளர்த்தது எங்கள் அத்திம்பேருக்குக் கொஞ்சம்கூட இஷ்டமில்லை. "இதைத் தேடிக்கொண்டு என்றாவது புலி இங்கே வந்துவிடப் போகிறது, அவ்வளவுதான், உங்களுக்குச் சொன்னால் தெரியவில்லை" என்று சொல்லிப் பெருமூச்சு விடுவார். நித்தியம் ஒரு கதை வீட்டுக்குக் கொண்டு வருவார். "இன்று போர்ட்டர் வீட்டு ஆட்டுக் குட்டியை இரவில் கழுதைப்புலி தூக்கிக்கொண்டு போய்விட்டது" என்று கொண்டு போன விதத்தைத்தான் பார்த்தது போல விஸ்தாரமாகச் சொல்லுவார்.

எங்கள் மணிக்கு (அவனுக்கு வயது ஏழு) ஒவ்வொரு மிருக தினிசிலும் ஒரு குட்டி அகத்தில் இருக்கவேண்டுமென்று ஆசை. ஏற்கனவே வீட்டில் மான் குட்டி, நாய்க்குட்டி, முயல்க்குட்டி,—கன்றுக்குட்டி எல்லாம் இருந்தன. பூனைக்குட்டி ஒன்று வெகுநாளாகத் தேவை. ஒரு புலிக்குட்டியும் சிறுத்தைக் குட்டியும் இருந்தால்கூட நன்றாக இருக்கும் என்பது அவன் அபிப்பிராயம்.

பக்கத்து ஊரிலிருந்து எங்கள் வீட்டுக்குத் தயிர் கொண்டு வருபவளை வெகு நாளாக அவன் நச்சுப் படுத்திக் கொண்டிருந்தான் "அடியே, ஒரு பூனைக்குட்டி கொண்டுவா" என்று.

ஒரு நாள் சுமார் ஒன்பது மணியிருக்கும். எங்கள் அத்தம்பேர் ஸ்டேஷனுக்குப் போயிருந்தார். நாங்கள் எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். தயிர்க்காரி தயிர் கொண்டு வந்தாள். எங்கள் அக்கா தயிர் வாங்கப் போனாள், வாசலுக்கு.

"பூனைக்குட்டி கொண்டு வந்திருக்கிறேன், அம்மா!" என்றாள் அவள்.

"எங்கே?"

"இதோ இந்தச் சாக்கில் இருக்கிறது" என்று வாயைக்கட்டியிருந்த ஒரு சாக்கு மூட்டையைக் காட்டினாள்.

"ஐயையோ! மூச்சுப் போய்விடாதோ? ஏதுக்கு சாக்கில் கட்டியிருக்கிறாய்?"

"கையில் எடுத்துக்கொண்டு வந்தால் பிராண்டிப்பிடும், அம்மா! இப்

பவே முதுகெல்லாம் பிராண்டிப் பிட்டுதுங்க'' என்றாள்.

மணிக்கு சாப்பாடு கொள்ள வில்லை. கூடத்திலிருந்த சாக்கு மூட்டையில்தான் அவன் கவனம் பூராவும். எல்லோருக்கும் முன்னல் சாப்பிட்டுவிட்டு எழுந்திருந்து போய் மூட்டையைத் தொட்டுப் பார்த்தான்.

"அடே, மூட்டையை இப்பொழுது அவிழ்க்காதே, நான் சாப்பிட்டுவிட்டு வருகிறேன். குட்டியை மெள்ள வெளியில் எடுக்கவேண்டும், உனக்குத் தெரியாது'' என்றாள் அக்கா.

"சரி, சட்டென்று வா'' என்றான் மணி.

சும்மா இருக்காமல் "கட்டையவிழ்த்து வாய் வழியாக குட்டி எப்படி இருக்கிறது என்று பார்ப்போம். வெளியே எடுக்கத்தானே கூடாது'' என்று எண்ணி சாக்கு மூட்டையை அவிழ்த்தான்.

மணியிடமிருந்து ஒரு அலறல் சத்தம் கேட்டது. எல்லோரும் கூடத்துப் பக்கம் திரும்பிப் பார்த்தோம். ஒரு முரட்டுப் பூனை சாக்கிலிருந்து வெளியே பாய்ந்து மணி மேல் விழுந்து பிராண்டிவிட்டு வாசல் பக்கம் ஓடிற்று. ஆனல் வாசல் கதவு சாத்தியிருந்தது. ஆகையால் திரும்பி உள்ளே ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து கொல்லைப் புறம் போயிற்று. அங்கும் கதவு சாத்தியிருந்தபடியால் சமையல் அறை வழியாக எங்கேயாவது வழியிருக்காதாவென்று நினைத்தது போல நாங்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்த இடத்திற்கு வந்தது.

பெரிய ஆண் பூனை! ஒரு தரம் எங்களைப் பார்த்துவிட்டு இரண்டு ஆள் உயரத்திலிருந்த ஒரு ஜன்னலைப் பார்த்துப் பாய்ந்தது. ஆனல் அது எட்டவில்லை. தடாலென்று எங்கள் நடுவில் விழுந்தது. நாங்கள் எல்லோரும் அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்து மூலைக்கொருவராக ஓடினேம். மணி கூடத்தில் நின்று கதறிக்கொண்டிருந்தான். எங்கெங்கெல்லாமோ ஓடிப்பார்த்தது. வெளியே போக வழியில்லை. அதைத் தாண்டிக்கொண்டுபோய் வாசற் கதவையோ கொல்லைக் கதவையோ திறப்பதற்கு எங்கள் ஒருவருக்கும் தைரியம் வரவில்லை.

மறு நிமிஷம் கதவு திறந்த சத்தம் கேட்டது. (அக்கா வெறும் கதவு தான் சாத்தியிருந்தாள்.) அத்தம்பேர் "ஐயையோ!'' என்று அலறின சத்தமும் உடனே கேட்டது. எல்லோரும் வாசலுக்கு ஓடினேம். அத்தம்பேர் அப்படியே வாசற் குரட்டில் விழுந்து கிடந்தார்.

அவரை உள்ளே தூக்கிக் கொண்டு வந்து பிரக்ஞை தெரிய வைத்தோம். கண் திறந்ததும் "புலி! புலி!'' என்றார்.

"இல்லையே! பூனையல்லவா உள்ளேயிருந்து ஓடினது'' என்றாள் அக்கா.

"நான் சொன்னல் யார் கேட்கிறார்கள்? எனக்குத் தெரியும் என்றுவது புலிவரும் என்று'' என்று அத்திம்பேர் கொஞ்சம் கொஞ்சமாகப் பேசினர்.

"இல்லன்னுக்க! பெரிய பூனைதான் அந்த வர்ணமாக இருந்தது. நம்ம தயிர்க்காரி கொண்டு வந்தாள்.''

"எனக்குத்தெரியாதா? அது புலிதான்'' என்று சாதித்தார் அத்தம்பேர்.

ஒரு வேளை தயிர்க்காரி தப்பிப் போய் புலிக்குட்டியையே கொண்டு வந்து விட்டாளோ என்றுகூட எங்களுக்கு ஒரு சந்தேகம் தோன்றிற்று.

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

# "குற்றம் குற்றமே!"

(ஸ்ரீ பெ. கோ. சுந்தரராஜன்)

(மதுரை சங்க மண்டபம். பல புலவர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்.
நக்கீரரும் கபிலரும் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.)

நக்கீரர்—கபிலரே! என்ன ஆழ்ந்த யோசனை?

கபிலர்—சற்றுமுன் அவ்வந்தணன் கொண்டுவந்த பாட்டைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன்.

நக்கீரர்—தருமியின் பாட்டா? அதை அவன் எழுதியிருக்க முடியாது.

கபிலர்—ஆயினும் அழகில் நமது பாடல்களை விடக் குறைந்ததல்லவென்றே தோன்றுகிறது.

நக்—அதனால்தான் அவன் கற்பனை யல்லவென்றேன். அப்பாட்டின் ஆசிரியன் பெரும் புலவனாக இருக்க வேண்டும்.

கபி—ஆனால் பாண்டியன் வாக்குப்படி பொற்கிழி அளிக்க மறுத்து விட்டீர்களே.

நக்—பாட்டைப் போற்றுவதும், பொற்கிழி அளிப்பதும், ஒன்றாகுமா?

கபி—பாண்டியன் அங்கீகரித்த பாட்டல்லவா அது?

நக்—ஏன்? சங்கமே அங்கீகரிக்கும். அவ்வளவு சொல்லழகு.

கபி—ஆனால் பாட்டு, பாண்டியன் கருத்தை வெளியிட வில்லையா?

நக்—அவன் கருதியதை வெளியிட்டது.

கபி—பின், என்ன ஆக்ஷேபணை?

நக்—பாட்டின் தீர்ப்பு சரியல்ல.

கபி—அதெப்படி? அரசனே ஒப்புக் கொண்டிருக்கும்போது!

நக்—பாட்டின் கருத்தை அங்கீகரிக்கப் பாண்டியனுக்கு உரிமை இல்லை. அந்த அதிகாரம் சங்கத்தைச் சேர்ந்தது. மொழியைக் காப்பது நாமன்றோ.

கபி—அதன் சொல்லழகைப் போற்ற வில்லையா நீரே!

நக்—ஆம். சொல் எவ்வளவு அழகாயிருந்தாலும், உண்மையை மறைக்கக் கூடாது.

கபி—தருமியின் பாட்டு பொய்யா?

நக்—பொருட் குற்றம் நிறைந்தது.

கபி—எனக்குத் தெரிய வில்லையே. சற்று விளக்கி......

(சொக்கநாதர் கிழவேடத்தில் வருகிறார்)

......அதோ யாரோ ஒரு கிழவர்—பெரியவர் வருகிறார். முகத்தில் புலமை பிரகாசிக்கிறது.......

வாரும் பெரியவரே எங்கள் சங்கத்திற்கு நல்வரவாகட்டும். தாங்கள் யார்? இதோ இப்படி அமரும்.

சொக்கநாதர்—அமர்வது அப்புறம்! நான் அனுப்பிய பாட்டை அவமதித்தது யார்?

கபி—பெரியீர்! உமது பாட்டுக்கு அவமதிப்பா! உம்மைக்கண்டதே எங்களுக்குக் களிப்பாயிற்றே!

நக்—கபிலரே! பெரியவர் குறிப்பது தருமி கொண்டுவந்த பாட்டுதான்......... ஐயா! அந்தக் கவியின் கருத்தை மறுத்தது நான்தான்.—நக்கீரன்.

சோ—நக்கீரன்! தமிழ்மொழித் தலைவ! என் கற்பனை என்ன அவ்வளவு கேவலமா?

நக்—அல்ல! உமது பாட்டைப் பார்த்து வியந்தேன். பூரித்துப் புகழ்ந்தேன். இன்னும் போற்றுகிறேன்.

சோ—பொற்கிழி மாத்திரம் மறுப்பானேன்?

நக்—பொன் பெறும் விதியைப் பாட்டு நிறைவேற்ற வில்லை.

சோ—என்ன விந்தை? சங்கம் போற்றும் பாட்டுக்குப் பரிசுதரமறுப்பா?

நக்—ஆம், சங்கமும் போற்றும். எங்கும் பரவும் அப்பாட்டு. உமது வருகையே எங்கள் சங்கத்தின் நல்லகாலம்.

சோ—போதும் முகஸ்துதி. பாட்டின் குறையென்ன, இவ்வளவு போற்றிய பின்?

நக்—மலர்போன்ற பாட்டின் அழகு முழுவதையும் கெடுக்கும் ஒருமுள் அதில் பொதிந்துக் கிடக்கிறது.

சோ—முள் மணத்தையும் கெடுக் குமோ?

நக்—விரலில் குத்தும்.

சோ—அந்த முள்தான் என்ன?

நக்—பொருட் குற்றம்!

சோ—பொருட் குற்றம்! அலைகடலில் அலசி எடுத்த முத்துக்குள் மணல் தேடு கிருயா?

நக்—முத்தோடு வந்த மணல்தான் அதிகம். முத்து நழுவி விட்டதோ என்னவோ?

சோ—முத்தெடுக்க மனமிருந்தால் மணல் வருமோ? எங்கே விளக்கு பார்ப் போம் குற்றத்தை!

நக்—கோபித்துப் பயனில்லை. என் கடமையைச் செய்கிறேன். பாண்டியன் மனைவியின் கூந்தலில் மணமிருப்பதாகச் சொல்லியிருப்பது தவறு!

சோ—வாசனையை அறியாமலா வேந் தன் வாங்கிய சூடாமணிக்குச் சந்தேகம் பிறந்தது?

நக்—வாசனை இருந்தது வாஸ்தவம். அரசி யணிந்திருந்த மலரே மணத்திருக் கும்.

சோ—அம்மலரின் மணமல்ல அரசன் அப்பொழுது உணர்ந்தது. கூந்தலில் தானே பிறந்திருக்கும் அந்த அபூர்வ மணம்.

நக்—அவசியமல்ல. காற்று கமழ்ந் திருக்கலாம். அரசனும் அரசியும் சோலை யில் உலாவிக் கொண்டிருந்தனர். மாலைக் காலம். தென்றலின் விளையாட்டு வேளை.

சோ—கமழ்ந்தது காற்ருயினும் வாசனை அறிந்த மலரினதல்லவே? பரிசுத்தப் பத் னியாகிய அரசியின் கூந்தலுக்கு அத் தன்மை ஏன் இருக்காது?

நக்—நல்லவாதம்! அப்படிப்பட்ட மலரை அறியாதது நம் குற்றம். மலரின் குற்றமல்ல. பாண்டியன் தேவி கற்பரசி யாயினும், கூந்தலுக்கு இயற்கை மணம் கிடையாது.

சோ—என்ன பேதமை! கற்பிற் சிறந்த பெண்களின் கருத்துதான் அப் படிப் பரிமளிக்கிறது என்பதை அறி யாயா?

நக்—அறிவதற்கு அது உண்மையல்ல. உங்கள் கற்பனை. கற்பனை அழகுதான். இயற்கைக்கு முரணனது.

சோ—கற்புமா இயற்கைக்கு முரண்?

நக்—பெரியவரே! சொல்லை முறுக்க வேண்டாம். கூந்தலுக்கு வாசனையிருப் பதுதான் முரண் என்றேன்.

சோ—மணம் இருப்பதை மறுக்கிருய். மலரை ஏன் ஒப்புக்கொள்ளுகிருய்? கற்பாகிய மலரும் முரண்தானே!

நக்—ஆம். கற்பு மலர்போன்றதென்ருல் முரண்தான். மலரைப் போல் சீக்கிரம் வாடி விடும் கற்பு, இயற்கைக்குத் தேவை யில்லை.

சோ—மெச்சினேன். வெறும் வார்த்தை யில் உன்னை வெல்வது கடினம். ஆனல் வாசனை மலருக்கன்றி கூந்தலுக்கில்லை யென்று முடிவாகக் கூறுகிருயா?

நக்—ஆம். மலர்ச் சேர்க்கையின்றி மணம் பெறும் கூந்தல் எங்குமில்லை.

சோ—தேவ மகளிருக்குமா?

நக்—தேவமகளிருக்கு மணமெதற்கு?

சோ—வீண் கேள்வி வேண்டாம்? விடையளி பார்ப்போம். தயக்கமா?

நக்—தயக்கமல்ல. தைரியம்தான். தெய்வப்பெண்களாயினும் சரி, மணக்கும் கூந்தல் பெற்ற மங்கை யில்லை.

சோ—நக்கீர, யோசித்துச் சொல். இதற்கு விலக்கு ஒருவருமே யில்லையா?

நக்—இல்லை.

சோ—நீ வழிபடும்...?

நக்—தேவிக்குக்கூடக் கேசம் மணக் காது!

சோ—என்ன, உன் தெய்வம் சொக்க நாதன் பத்தினிக்கா? காளத்தீச்வரன் காதலிக்கா? அறிவைப் பரிமளிக்கும் ஞானப் பூங்கோதையின் கூந்தலுக் குமா இயற்கை மணம் இல்லை?

நக்—விலக்கு ஒருவருமில்லை யென் றேனே. நான் வழிபடும் தேவியாயிருந் தாலென்ன? என் கருத்தை மறைப் பேனு?

சோ—நக்கீர, பொருட் குற்றம் தேடப் போய் பெருங் குற்றம் செய்துவிட்டாய்.

நக்—குற்றம் உங்களுடைய கவியில் தான். அதைக் கண்டது என் கடமை.

சோ—தமிழ்த்தலைவ, புறக்கண்ணால் பார்த்த குற்றத்தை உண்மையென்று நினைக்கலாமா?

நக்—பெரியீர்! உங்கள் புலமையைக் கண்டு வியந்தேன். இப்பொழுது உங்கள் பிடிவாதம் என்னை வருத்துகிறது. வீண் வாதமேன்? புறக்கண்ணும் அகக்கண்ணும்! எனக்கிருப்பது இரண்டு கண்கள் தாம். உமக்கிருப்பதும்...

சோ—அல்ல, நக்கீரா, அல்ல! நன்றாய்ப் பார்!

(சொக்கநாதர் நெற்றிக்கண்ணைத் திறந்து காட்டுகிறார். பயங்கர சப்தம். சுற்றியிருக்கும் புலவர்கள் "ஐயோ வெப்பம்" என்று கத்துகிறார்கள். கோரசப்தம்)

கபிலர்—ஆ, நக்கீரரே என்னகாரியம் செய்தீர்? வந்தது பரமசிவன். ஐயோ! உம், உடம்பு எரிகிறதே...அதோ மீண்டும் கிழவர் உருவம்!

நக்—கபிலரே! உடம்பை எரிக்கலாம். உண்மையை எரிக்க முடியாது.

சோ—நக்கீர, உன் மமதையினால் எது உண்மையென்று தெரியவில்லை உனக்கு. இனியாவது உன் குற்றத்தை ஒப்புக் கொள்ளுகிறாயா?

நக்—ஈசனே! வப்பத்தால் வருந்துகிறார்) ஐயோ! ஈசனே தாங்கள் இங்கே எழுந்தருளியது என் தவப்பயன்! உங்கள்—ஆ!—மூன்றாம் கண்ணைக் கண்டதும் என் பாக்கியம். ஆனால்...ஆனால், நான் கற்ற தமிழைக் கைவிடத் தூண்டவேண்டாம்.

சோ—சங்கப் புலவா! தேவியின் கூந்தல் மணம்போல் தமிழ் மணக்கும். உனக்கென்ன கவலை? நீ சொல்லியது தவறு, குற்றத்தை ஒப்புக்கொள்.

நக்—முடியாது.

சோ—நக்கீர! இன்னும் உன் மமதை உன்னை விடவில்லை. கேவலம் சங்கலுக்கும் நீயா என் பாட்டைப் பரிசோதிப்பது?

நக்—ஈசா, சங்கலுப்ப தென்குலம். குலமும் பிறப்புமில்லாமல் கபாலத்துடன் திரியும் நீங்கள் தூற்றவேண்டாம். நெற்றிக்கண் பார்த்தால் நடுங்கமாட்டேன். இதோ என் உடல் பாதி வெந்துவிட்டது. முழுவதும் எரிந்தாலும்...ஆ—என் கருத்தைக் கைவிடமாட்டேன். குற்றம் குற்றமே!

சோ—ஆ! ஒப்புக் கொள்கிறாயா?

நக்—இல்லை. உங்கள் குற்றம்—உங்கள் பாட்டின் குற்றம், உங்கள் உடல் முழுவதும் கண்களாயினும், குற்றம்தான். எத்தனைக் கண்களிருந்து என்ன பயன்? அக் குற்றம் உங்களுக்குத் தெரியுமா?

சோ—பிடிவாதம் உன்னை விடாது. உன் தைரியம் உன்னைக் காப்பாற்றட்டும். பார்ப்போம்.

(மறைந்துவிடுகிறார்

கபிலர்—ஐயோ மதுரைஈசர் மறைந்து விட்டாரே. நக்கீரரே...என்...ஐயோ! உங்கள் துன்பம் காணச் சகிக்கவில்லையே.

நக்—கபிலரே! பொறுக்க முடியவில்லையே! உடல் முழுவதும் கொழுந்து விட்டு எரிகிறதே. கபிலரே! இரும். நான் பொற்றாமரை சென்று வெப்பத்தைத் தணித்து வருகிறேன்.

(போகிறார்)

கபிலர்—ஐயோ! என்ன விபரீதம்! ஈசனே! உன் பொன்கமலத் தண்ணீர் அவர் புண்ணை ஆற்றட்டும். மதுரேசா! நக்கீரர் திரும்பவரோ! சங்கம் தவிக்குமே தலைவனின்றி! தமிழ் அழிந்துவிடுமே!

சோ—(அசரீரியாய்) கபிலா! வருந்த வேண்டாம். நக்கீரன் உயிருடன் திரும்புவான். மன்னித்துவிட்டோம். நக்கீரன் நமது திருக்காளத்தி எழுச்சியைப் பாடிப் புகழ்வான். தமிழ் மேலோங்கும். தமிழ் அழியாது. கவலை வேண்டாம்.




## 'உழவனின் பாத்தியதை'

சென்னை ஜமீன்தாரி அறிக்கையைப் பற்றி எனது கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். உழவனுக்கும் இனும் குடிக்கும் சட்டபூர்வமான அந்தஸ்தை அது நிர்ணயிக்கவில்லை. ஆதலால், அவ்வறிக்கை முற்றுப்பெறவில்லை. வட ஜில்லாக்களில் ஒரு தினுசான (தரகர்கள்) விவசாயிகள் இருக்கின்றனர். இவர்கள் ஏராளமான நிலத்தை வைத்துக்கொண்டு வரி வசூலித்து வருகின்றனர். இவர்களை ரயத்துகள் என்று பாவிப்பதன்மூலம் இவர்களுக்குள்ளிருக்கும் ரயத்துகளுக்கு ஒரு ஸ்திரமான தன்மையில்லாமல் போய்விடுகின்றது. இரண்டாவதாக, குடிவார ரயத்துகளுக்குக் கீழ் அநேக விவசாயிகளிருக்கின்றனர். இவர்களுடைய அந்தஸ்து 1801-ம் வருஷம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் அவர்களுடைய வருமானம் மொத்த விளைச்சலில் பேர்பாதிக்கு மேல் போகக்கூடாதென்றும், கிராமாந்தர வழக்கப்படி பரம்பரை பாத்தியதை உண்டென்றும் ஏற்பாடாயிற்று. இதற்கு முன்புள்ள சர்க்கார்களின் அசிரத்தையால் இந்த உரிமைகள் அங்கீகரிக்கப்படாமல் அவர்கள் நிலையற்ற ரயத்துகளாயினர். மூன்றாவதாக, ஜமீன்களிலும் ஸ்திரத்தன்மையற்ற ரயத்துகள் இருக்கின்றனர்.

## தரகர்கள்

மத்திய நிலச்சுவான்களுக்குக் கீழ் உள்ள ரயத்துகளின் அந்தஸ்தையும், ரயத்துகளிடம் வேலை செய்யும் குடியானவர்கள் அந்தஸ்தையும் அங்கீகரிக்காவிடில், 1801-ம் வருஷம் ஏற்பட்ட விகிதத்திற்கு தீர்வையைக் குறைப்பதால் ஏற்படும் நன்மை நிலத்தில் பாடுபடும் பண்ணையாட்களுக்கும் போய்ச் சேராமல், சுயமாகப் பாடுபடாமல், தீர்வையையும் குத்தகையையும் வசூலிக்கும் மத்திய நிலச்சுவான்களுக்கும், ரயத்துகளுக்கும் போய்ச் சேரும். மத்திய நிலச்சுவான்களின் கீழுள்ள ரயத்துகளுக்கும், ரயத்துகளிடமிருக்கும் குத்தகைதார்களுக்கும் சட்டபூர்வமாக முறையே குடிவார ரயத்துகள் என்றும், உப-ரயத்துகள் என்றும் பாகுபடுத்திப் பாதுகாப்பு அளிக்கவேண்டும். இவ்விதம் பாதுகாப்பு அளிக்காத எந்தச் சட்டம் ஏற்பட்டாலும், அதனால் புதிய ரூபத்தில் பல சில்லரை ஜமீன்தார்கள் தோன்றி, கொடுமையான வரி வாங்கும் கூட்டம் அதிகரிக்கும். வர்க்கக் கூட்டங்களின் சம்பந்தா சம்பந்தங்களெல்லாம் நேரடியான போராட்டம், வர்க்க ரீதியான ஸ்தாபனங்கள், வேலை நிறுத்தங்கள் முதலியவற்றின் மூலம் முடிவு கட்டும்படி நேரிட்டுவிடும். தீர்வை சம்பந்தப்பட்டமட்டில் நிலத்தில் வேலை செய்யும் பண்ணையாட்கள் செலுத்த வேண்டிய தொகையை நிர்ணயிக்க வேண்டுமே ஒழிய, ஜமீன்தாருக்கு நேரடியாகப் பெரிய ரயத்துகள் செலுத்தும் வரியை நிர்ணயிக்க வேண்டியதில்லை. இதர குத்தகைதார்களை நிலத்துக்காக தங்களுக்குள் போட்டிப் போடும்படி விட்டுவிடவேண்டும். ஒரு எஸ்டேட்டின் மொத்த வரியை நிர்ணயிக்கும் அளவிற்குக் கமிட்டி யாதாஸ்து மிகுந்த உதவியளிக்கிறது. தனிப்பட்ட நபர் செலுத்த வேண்டிய தீர்வை சம்பந்தப்பட்டமட்டில், அதை ஒரு தோல்வி என்றே கருதவேண்டும். வரி நிர்ணய உத்தியோகஸ்தர்கள் தீர்வை அல்லது குத்தகையை நிர்ணயிக்கையில் செலுத்தக்கூடிய சக்தியைக் கணக்கெடுத்துக் கொள்ளவேண்டும். ஐக்ய மாகாணத்திலும், வங்காளத்திலும் மொத்த விளைச்சலில் முறையே $\frac{6}{15}$, $\frac{5}{15}$ ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாம் ரயத்துகளுக்குக் கீழுள்ள விவசாயிகளுக்கு, தற்சமயமுள்ள ரயத்வாரி விகிதத்திலிருந்து பேர் பாதியாக நிர்ணயிக்கலாம். (1) தற்சமயமுள்ள குடிவார ரயத்து விகிதத்தை முன் சொன்னதிலிருந்தும் பேர்பாதியாக்கலாம். (2) மத்திய நிலச்சுவான்களுக்குக் கீழ் குடிவார ரயத்துகளை ஸ்தாபிக்க வேண்டும். (3) 'சர்' நிலங்களில் குடிவார ரயத்துகளை ஸ்தாபிக்கவேண்டும். இதிலிருந்து $\frac{1}{8}$ பாகம் விகிதம் மத்திய நிலச்சுவான்தாருக்குக் குறைவு. இவ்விதமாக நிர்ணயிக்கப்பட்டதில் மொத்தத் தீர்வை 1801-ம் வருடம் நிர்ணயிக்கப் பட்டதற்கு அடுத்திருக்க வேண்டும்.

## மறு குத்தகை

மத்திய நிலச்சுவான்தார்களைப் பற்றி இங்கு குறிப்பிடுகிறேன். அவர்கள், உண்மையான ரயத்துகள் அல்ல. ஆனால், ஜமீன்தார்களுக்குக் கீழ் தீர்வை வசூலிப்பவர்கள். 1880-ம் வருடத்திலேயே வங்காளத்திலும், ஐக்ய மாகாணத்திலும் 50 ஏக்கரும் அதற்கு மேற்பட்ட அளவும் கொண்ட நிலமுள்ள இவர்கள் பிரத்யேக சலுகை கொண்டவர்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் கீழுள்ள ரயத்துகளுக்குக் குடிவார பாத்தியதை அளிக்கப்பட்டுள்ளது. அதை நாம் இப்பொழுதாவது செய்வோம். 100 ஏக்கர் புன்செய் நிலம் அல்லது 30 ஏக்கர் நன்செய் அல்லது தோட்டம், இவற்றிற்குக் குறைவான அளவு வைத்திருப்பவர்கள் குடிவார பாத்தியதை பெற்ற ரயத்துகளாகப் பாவிக்கப்படலாம். இதற்கு மேல் வைத்திருப்பவர்களை மத்திய நிலச்சுவான்களாக மதிக்கலாம். இவர்களுக்குச் சொந்த நிலமாக எவ்வளவு வைத்துக்கொள்ளலாமென நிர்ணயித்துவிட்டால், மற்ற ரயத்துவாரி விவசாயிகள் செய்வதுபோல் இவர்களும் தங்கள் நிலங்களைக் குத்தகைக்கு விடலாம். இது போல் ஜமீன்தார்களுக்கும் இவ்வளவு நிலம் தான் சொந்தத்திற்கு வைத்துக்கொள்ளலாமென நிர்ணயித்துவிடலாம். "சர்" நிலங்களை அவர்கள் குத்தகைக்கு விடலாம். இதர நிலங்களை அவர்கள் குத்தகைக்கு விடலாம். இதர நிலங்களிலுள்ள ரயத்துகளை குடிவார பாத்தியதையுள்ள ரயத்துகளென அங்கீகரிக்கவேண்டும். "சர்" நிலங்களிலும், எல்லை நிர்ணயிக்கப்பட்ட மத்திய நிலச்சுவான்களின் நிலங்களிலும் பாடுபடும் பண்ணையாட்களுக்கு ஐந்து வருஷத்திற்காவது நிரந்தர தீர்வையை ஏற்படுத்தி குடிவார பாத்தியதை அளிக்கவேண்டும். இந்த விவரங்களெல்லாம் 1938-வருஷத்திய ஐக்கிய மாகாண குடிவார மசோதாவை அடிப்படையாகக்கொண்டன.

தற்சமயமுள்ள ரயத்துக்களுக்கு ஐந்து வருடங்களில் தாங்களே உழுது பாடுபடுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கவேண்டும். (அதிக நிலம் வைத்திருப்பதால் மத்திய நிலச்சுவான்களை இம் மாதிரி செய்யச் சொல்ல வேண்டியதில்லை). இல்லையேல், மேலே குறிப்பிட்டுள்ளபடி நிலங்களில் வேலை செய்யும் பண்ணையாட்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். இனிமேல் ரயத்துகள் நிலங்களைக் குத்தகைக்கு விடும் வழக்கம் வைத்துக்கொண்டிருந்தால், குத்தகைதார்களுக்கே முன்னால் கூறியுள்ள விகிதப்படி தீர்வைகட்டி அனுபவிக்க பாம்பரை பாத்தியதை கொண்டாட உரிமை பெறவேண்டும். இதைக் கண்டிப்பாய் செய்துவிடவேண்டும். அதிகக் குத்தகை கிடைக்குமென ஆசைப்பட்டு எவனாவது குடிவார நிலத்தை விலைக்கு வாங்கினால் அவனுக்கு அந்த அனுகூலமும் கிடைக்காதபடி செய்துவிடவேண்டும். ஏனெனில், நிலம் வாங்குபவன் தானே உழுது சாகுபடி செய்யாமல் குத்தகைக்கு விடும் வழக்கம் வைத்துக்கொண்டால், குத்தகைதாருக்கு பரம்பரை பாத்தியதை கொண்டாட உரிமை அளிக்கப்பட்டிருப்பது அவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும். இனிமேல் நிலம் வாங்குபவர்கள் பெறும் குத்தகைத் தொகையும், ரயத்துகள் சர்க்காருக்குச் செலுத்தும் தீர்வையும் ஒரே அளவுள்ளதாகச் செய்துவிட வேண்டும். இம்மாதிரியான ரீதியில் சட்டம் செய்யாவிட்டால், யாதாஸ்தில் கண்டுள்ள சிபார்சுகளினால் ஜமீன்தாருக்கும், அவனுக்கு நேர் கீழுள்ள ரயத்துக்கும் நிலத்தில் பாடுபடும் பண்ணையாட்களிடமிருந்து அநியாயத் தீர்வையான கொள்ளையில் பாக விநியோக மாறுதல் செய்ததாகவே ஏற்படும். ஜமீன்தாருக்குக் கிடைத்த லாபமெல்லாம் நிலங்களைக் குத்தகைக்கு விட்டுவரும் அவருடைய ரயத்துகளுக்குச் சேரும் வகையால் நிலைமை இன்னும் மோசமாகிவிடும். இந்த ரயத்துகளுக்கு இனிமேல் குத்தகை அதிகம் வருமாகையால், அதிக நிலங்கள் வாங்குவதிலேயே இவர்கள் தங்கள் பணத்தை செலவழிப்பார்கள். அத்துடன் சில இனம் கிராமங்களை இந்த யாதாஸ்தில் குறிப்பிடாமல் விட்டுவிட்டதற்கு யாதொரு நியாயமும் கிடையாது. —"குடிநூல்."

## அகில இந்திய ரேடியோ ஊழல்கள்

அகில இந்திய ரேடியோ முதல்தரமான தேசியச்செல்வம். ஆனால், பொது ஜனங்களின் கவனத்தை அது சரியாகப் பெறவில்லை.

அகில இந்திய ரேடியோ உபயோகமற்ற 'புரோகிராம்களை' ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது. மத்திய சர்க்காரின் சிக்கன முறையால் ரேடியோ ஸ்தாபனத்தின் நிலைமை இன்னும் மோசமாகி வருகிறது. இது ஒரு வர்த்தக இலாகா. ஒழுங்காக நடத்தப்பட்டால் வரவுக்கும் செலவுக்கும் சரியாகப் போகலாம். இந்த டிபார்ட்மெண்டை நிர்வகிப்பவர்கள், போதுமான நிதி இல்லாததால் நஷ்டம் ஏற்படுகிறதென்றும், ரேடியோ ஸெட்டுக்களை வாங்குகிறவர்கள் தொகை குறைவாக இருப்பதுதான் இதற்குக் காரணமென்றும் கூறுகிறார்கள். இப்படிச் சொல்லிவிட்டால் தங்கள் பொறுப்பு சரியாய்ப் போகிறதென்று எண்ணுகிறார்கள். ரேடியோ ஸெட்டுக்கள் ஏன் குறைகின்றன என்பதை அவர்கள் ஆராய சிரத்தை எடுத்துக்கொள்ளுகிறதில்லை.

முழு இலாகாவும் தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மேல் அதிகாரிகளுக்குப் பிடிக்காவிட்டால் ஒரே நிமிஷத்தில் எல்லோரும் டிஸ்மிஸ் செய்யப்படலாம். ஒவ்வொரு நாளும் 'நாளைக்கு என்ன ஆகுமோ?' என்று பயந்துக்கொண்டிருக்கும் உத்தியோகஸ்தர்களிடம் உற்சாகத்தையும், நீடித்த கொள்கையையும் எப்படி எதிர்பார்க்க முடியும்? ஆகவே இத்தகைய மனிதர்கள் மூன்றாம்தர புரோகிராம்களைத் தயாரிப்பது ஆச்சரியமில்லையல்லவா?

இந்த இலாகாவின் எதிர்காலத்தைப்பற்றி சட்டசபைதான் சர்க்காரைத் தூண்டி ஒரு முடிவுக்கு வரும்படி செய்யவேண்டும். இது சர்க்கார் வசம் இருக்கவேண்டுமா அல்லது பி. பி. ஸி. போன்ற ஒரு ஸ்தாபனத்தின் வசம் ஒப்புவிக்கவேண்டுமோ, என்பதைப் பற்றி முடிவு செய்யவேண்டும். அப்படிச் செய்து உத்தியோகஸ்தர்களுக்குப் பத்திரமளித்தாலல்லாது, ஒரு விதமான முன்னேற்றத்தையும் எதிர்பார்க்க முடியாது. மத்ய சர்க்கார் சமஷ்டி வந்ததும் பார்த்துக்கொள்வார்களென்று 'கம்' மென்று இருக்கிறார்கள். ஆனால் சட்டசபை முன் வந்து சர்க்காரை ஒரு முடிவுக்கு வரும்படி கட்டுப்படுத்த வேண்டும்.

செய்திகள் ஒரு ஐரோப்பியர் வசம் இருக்கின்றன. அஸெம்பிளி எதிர்ப்புக்கிடையில் இந்த உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டார். டெல்லியிலிருந்து வரும் செய்திகளில் பிரிட்டிஷ் அகம்பாவம் தொனிக்கிறது. இந்தச் செய்திகள் ராய்ட்டர், அஸோஸியேடட் பிரஸ் கொடுக்கும் செய்திக் குறிப்புக்களை அஸ்திவாரமாகக் கொண்டது. ஆகவே பிரிட்டினின் நலத்துக்கான செய்திகள்தான் பரப்பப்படுகின்றன. அ. இ. ரே. தனக்காக ஒரு செய்தி ஸ்தாபனத்தை உண்டாக்கிக் கொள்ளவேண்டும். இந்தியர் நலனுக்கான உள்நாட்டு வெளி நாட்டுச் செய்திகளை சேகரிக்கலாம். நம் தேசத்தில் நடப்பதை வெளி நாட்டிலிருக்கும் இந்தியர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். ஆகையால் இந்தியர்களுக்கு உபயோகமான செய்திகளை தயாரித்து பரப்பும்படி அ. இ. ரே. ஸ்தாபனத்தைக்கேட்க நமக்கு உரிமை உண்டு.

## புரோகிராம்கள்

அ. இ. ரே. வின் வெற்றி புரோகிராம்களில் அடங்கியிருக்கிறது. தற்போது இந்த இலாகா எவ்வளவு தூரம் செல்லலாமோ அவ்வளவு தூரம் சென்றுவிட்டதாகத் தோன்றும். ஏனென்றால் ஒரே விதமான மனிதர்களின் குரலைத்தான் ரேடியோவில் கேட்கிறோம். இதற்குக் காரணம் புரோகிராம் உத்தியோகஸ்தர்களின் தவறுகள்தான். புதுப்புது மனிதர்களை அவர்களுக்குத் தேர்ந்தெடுக்கத் தெரியாது. இந்த வேலைக்கு பத்திரிகா அனுபவம் மிகவும் அவசியமானது. இலாகாவின் முக்கிய உத்தியோகங்களுக்குப் பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் ஆலோசனையுடன் நியமனம் செய்யப்பட்டது வாஸ்தவம்தான். இதெல்லாம் கண் துடைக்கும் வேலை. பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் பரிசீலனை செய்யும் போதெல்லாம் ரோயோ இலாகாவின் பிரதிநிதியின் வார்த்தையின்படிதான் கமிஷன் ஆடிற்று. ஸர்வீஸ் கமிஷன் எதற்காக நியமிக்கப்பட்டதோ அந்த கார்யம் வீணாயிற்று.

—ஸ்ரீ. கபார்டே.

## புத்துணர்ச்சி

ஹரிபுராக் கூட்டத்திலிருந்து இதுவரையில் நடந்த சம்பவங்களைக் கவனித்துவந்தால் காங்கிரஸின் சாமர்த்தியம் நன்றாகப் புலப்படும். எல்லா சமஸ்தானங்களும் விழித்துக்கொண்டன. அநேக சமஸ்தானங்களில் பொது ஜன சேவை நடந்துவருகிறது. வெகு விரைவாக இந்தியாவிலுள்ள மற்ற ஜனங்களைப்போல், சமஸ்தானங்களிலுள்ளவர்களுக்கும், தேசீய உணர்ச்சிமேலிட்டு வருகிறது. அவர்கள் பளுவு நமக்கு இனிமேல் இல்லை. அவர்களுடைய இயக்கத்தால்தான் நம் தேசீய அரசியல்வாதம் முக்கியமாகிறது. ஆகையால், இந்த சமஸ்தானங்களில் நடக்கும் போரை, நாம் பெரிய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் செய்யும் போருடன் ஒன்று சேர்க்கும் காலம்வந்து விட்டது. சுதந்திரத்துக்காக விதம் விதமான பல போர்கள் இல்லை. இந்தியாவின் விடுதலைக்காகச் செய்யும் போர் ஒன்றுதான் மிகப்பெரியது. அதன் அம்சங்கள் மாறுபடலாம். அதன் போர்க்களங்கள் பலவாக இருக்கலாம். ஆனால் அது யுத்தம் ஒன்றே. காந்திஜி சொல்வதுபோல் சுதந்திரப் போர் எப்போது நடந்தாலும், அது இந்தியா முழுவதிற்கும் சொந்தமானது. இந்த ஸமஸ்தானங்களின் நெருக்கடியில், இந்தியாவின் கௌரவத்தில் பெருமைகொண்டு, இந்தியாவின் சுதந்தரத்தையே நினைத்துக்கொண்டிருக்கும் காந்திஜி முன்வந்து தன் பழுத்த கணீரென்ற ஓசையில் ஜனங்களுக்கு நம்பிக்கையையும் தைர்யத்தையும் ஊட்டினது மிகவும் அவசியமானதுதான். காந்திஜியின் உபதேசம் பழைய வாதங்களை முடிவுசெய்து நம்முன் நிற்கும் வேலையை நன்றாக எடுத்துக் காண்பித்து, திடத்துடன் வேலை செய்யத் தூண்டுகிறது. —ஸ்ரீ ஜவஹர்லால் நேரு.